பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 17 வியாழக்கிழமை (02.12.2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 06

## குருநகர்-திருநகர் கோஷ்டி மோதல்; நேற்று சுமுகத் தீர்வு எட்டப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.2

குருநகர் மற்றும் திருநகர் பகுதிகளில் கடந்த இரண்டு தினங்களாகத் தொடர்ந்த கோஷ்டி மோதல்களுக்கு நேற்று இணக்கம் காணப்பட்டது.

மேற்படி மோதல் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கென நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ். சென்.பற்றிக்ஸ் வீதியில் உள்ள லொயலாஸ் விருந்தினர் விடுதியில் முக்கிய கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வர் வண.பிதா ஜே.பீ. நீக்கலஸ் அடிகளார் யாழ். ஆயரின் செயலாளர் எஸ்.றொகான் அடிகளார் குருநகர் கிராம உத்தியோகத்தர்களான எம். யூலன். எஸ்.ஞானசேகரம், எஸ்.சுந்தரலிங்கம் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பதற்றம் தொடர்கிறது லிங்கநகரில் படையினர் குவிப்பு!

திருகோணமலை.டிசெ.2

திருகோணமலை, லிங்கநகரில் நேற்றிரவு வன்முறைகள் இடம்பெற்றன என்று தகவல்கள் பரவியதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவியது.

சில வீடுகள் எரிக்கப்பட்டதாகவும் சிலர் தாக்கப்பட்டனர் என்றும் வதந்திகள் பரவின.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் லிங்கநகரின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள லூதா தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் - உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. இச்சம்பவம் நேற்று நள்ளிரவு வேளையிலேயே இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

இத்தகவல்களை பொலீஸ்தரப்போ, இராணுவத்தரப்போ உறுதிப்படுத்தவில்லை. லிங்கநகரில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தணிக்கவும்,

(16 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களை நாடாளுமன்றிலிருந்து அகற்ற முயற்சி!

## ஆளும் தரப்பினரின் சதித்திட்டத்துக்கு ஐ.தே.கட்சியும் ஒத்துழைக்கின்றதாம்

கொழும்பு,டிசெம்பர்2

அரசமைப்புக்கு முரணாகவும், பிரிவினைக்கு ஆதரவாகவும் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரசாரம் நடத்திவருகின்றனர் என்று குற்றம் சுமத்தி, அதைக் காரணங்காட்டி அவர்களை நாடாளுமன்றத்திலிருந்து அகற்றுவதற்கு வழி செய்யும் சட்ட ஏற்பாடுகளை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்தாகக் கூறப்படுகின்றது.

ஆளும் கட்சித் தரப்பில் முனைப்பாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த முயற்சிக்கு, ஜாதிக ஹெல உறுமயவினரும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியில் கணிசமான எண்ணிக்கையான முக்கியஸ்தர்களும் முழு ஆதரவு வழங்க முன்வந்திருக்கின்றனர் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எம்.பிக்கள் உட்பட அரச ஊழியர்கள் அனைவரும் பிரிவினைக்கு எதிராகச் சத்தியப் பிரமாணம் செய்யவேண்டும் என்று கட்டாயப் படுத்தும் சட்ட ஏற்பாட்டை 1983 கலவரத்தை அடுத்து ஆறாவது அரசமைப்புத் திருத்தமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்து. அதன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் எம்.பிக்கள் அனைவரையும் நாடாளுமன்றத் திலிருந்து கூண்டோடு வெளியேற்றி அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தரப்பிடமிருந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் தட்டிப் பறித்தது அப்போதைய ஜே.ஆர். அரசு. அது போன்றதொரு முயற்சிக்கான சதிவலையே இப்போதும் பின்னப்படுவதாகக் கூறப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களின் பிரிவினைப் பேச்சுக்களுக்கு அடியோடு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் -பாலசிங்கம் லண்டனில் சந்தித்துப்பேச்சு!

லண்டன்,டிசெ.2

நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் நேற்று லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து சுமார் 2 மணி நேரம் பேச்சு நடத்தினார்.

மாவீரர் தினத்தன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நிகழ்த்திய உரை குறித்து, இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில் சொல்ஹெய்ம் எதிர்வரும் 6 ஆம் திகதி இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை 12 ஆம் திகதிக்குப் பிற்போட்டுள்ளார். (எ)

## நோர்வேத் தூதுவர் இன்று வன்னி பயணம்

கொழும்பு, டிசெ.2

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று ஹர்த்தால்

வவுனியா - மன்னார் பகுதியில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

இப்பகுதிகளின் மாணவர் ஒன்றியம் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் பொது அமைப்பு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் அறிவிப்பு புலிகளால் ஆராய்வு

கொழும்பு.டிசெ.2

மாவீரர் தினத்தன்று தலைவர் பிரபாகரன் விடுத்த அவசர அழைப்பைநிராகரித்து இலங்கை அரசு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்த அறிவிப்புக் குறித்து புலிகளின் தலைமை விரிவாக ஆராய்ந்து வருவதாக புலிகளுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

### பிரபாவின் அவசர அழைப்பை நிராகரித்தது அரசு!

## இடைக்கால ஏற்பாடு, இறுதித் தீர்வு இரண்டும் ஒன்றாகவே பேசப்படவேண்டும் என அறிவிப்பு

கொழும்பு.டிசெ.2

இடைக்கால அதிகாரசபை குறித்துப் பேசும் அதேசமயம், இறுத்தீர்வு குறித்தும் பேசவேண்டும்.

- இதுவே தனது நிலை என்பதை இலங்கை அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர்தின உரைக்கு, தான் வெளியிட்டுள்ள பிரதிபலிப்பிலேயே இலங்கை அரசு இப்படித் தெரிவித்திருக்கின்றது.

இடைக்கால விவகாரமும், இறுதித் தீர்வும் ஒரே சமயத்திலேயே பேசப்படவேண்டும் என்ற தனது விடாப்பிடி நிலைப்பாட்டை இலங்கை அரசு இதன்மூலம் மீண்டும் உதிறு செய்திருக்கின்றது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகத் தமது இயக்கம் முன்வைத்துள்ள யோசனைகளின் அடிப்படையில் பேச்சை நடத்துவதற்கு விரைந்து முன்வராவிட்டால், தமது சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிப்பதைத் தவிர தமக்கு வேறுவழியில்லை என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### அரசுக்கு ஹெல உறுமய எச்சரிக்கை

## 4 கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் சாகும்வரையில் உண்ணாவிரதப் போர்

நான்கு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து டிசெம்பர் 12 ஆம் திகதிக்கு முன்னர் அவை நிறைவேற்றப்பட வேண்டும் என அரசிற்குக் காலக்கெடு விதித்திருக்கிறது ஜாதிக ஹெல உறுமய. இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் அக்கட்சி எச்சரித்திருக்கிறது.

ஜாதிக ஹெல உறுமயவின் செய்தியாளர் மாநாடு நேற்று பௌத்தாலோக மாவத்தையிலுள்ள தன்கட்சித் தலைமையகத்தில் நடை ,பெற்றது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற

(16 ஆம் பக்கம் பார்க்க)

## டிராக்டர் - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் இளைஞன் உயிரிழப்பு!

### வட்டு.துணைவியில் நேற்றுச் சம்பவம்

வட்டுக்கோட்டை, டிசெ.2

உழவு இயந்திரமும் -மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளைஞர் பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் சங்கரத்தை -துணைவிப் பகுதியில் இடம்பெற்றது.

சங்கரத்தையைச் சேர்ந்த ஜெயபாலன் கஜேந்திரன் (வயது -21) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சைக்குச் சென்றவேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இன முறுகலை ஏற்படுத்திப் புலிகள் இலக்கை அடைய முயற்சிக்கின்றனர்

## ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

நாட்டில் இனரீதியான முறுகல் நிலையை ஏற்படுத்தி, தமது நோக்கத்தை அடையப் புலிகள் எத்தனிக்கின்றனர்

பிரபாகரனின் மாவீரர் உரையைச் செவிமடுக்காத மக்களுக்கு அதை நாடாளுமன்ற உரைகள் மூலமாக வெளிப்படுத்தி, நாட்டில் ஒரு பயங்கர நிலையை உருவாக்க தமிழ் எம்.பிக்கள் முனைகின்றனர். நாட்டு மக்களை அச்சுறுத்தும் இதுபோன்ற செயல்களை அனுமதிக்கமுடியாது.

- இப்படிக் கூறுகிறார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இதுபற்றிக் கூறியதாவது:-

பிரபாவின் மாவீரர் தின உரை என்பது சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் தம்பக்கம் ஈர்த்துக் கொள்வதற்கு அவர்கள் மேற்கொண்ட ஓர் உத்தியாகும்.

புலிகளின் மதியுரைஞர் லண்டனில் ஆற்றிய உரையிலும், பிரபாகரன் ஆற்றிய உரையிலும் எந்தவித வேறுபாடும் இல்லை. ஏனெனில் அந்த உரைகளைத் தயாரித்தவர் அன்ரன் பாலசிங்கம் என்பது புலனாகிறது.

பிரபாவின் உரையைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுவரும் மாற்றங்களின் பின்னணியில் இனரீதியான குழப்பங்களை ஏற்படுத்தும் ஒரு வகை மறைமுக தூண்டுதல்கள் உள்ளன. பேராதெனிய மாணவர் தங்கும் விடுதியில் பிரபாகரனின் பெரிய படமொன்றை வைத்து அங்கு மாவீரர்தினம் அனுஷ்டிக்க தமிழ் மாணவர்கள் முயற்சித்துள்ளனர். மறுபுறம் நாடாளுமன்ற வளவில் விளக்கேற்றி மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு செயலாகும்.

இனரீதியான தூண்டுதல்களை ஏற்படுத்தித் தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளப் புலிகள் திட்டமிட்டுள்ளனர். இதற்கு நாட்டு மக்கள் துணைபோகக்கூடாது.

இந்த நாட்டில் இனக்கலவரத்தை ஏற்படுத்த ஜே.வி.பி. அனுமதிக்காது.

இனவாதத்தைத் தூண்டி அதில் குளிர்காய முற்படுபவர்களுக்கு எதிராகச் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதில் ஜே.வி.பி. உறுதியாக இருக்கும். 1983 ஜூலைக் கலவரம் புலிகளின் நடவடிக்கைகளுக்குப் பாரிய உந்துசக்தியாக அமைந்தது. தமிழர்கள் அவர்களுக்கு ஆதரவு வழங்கினர்.

ஆனால், கடந்தவாரம் நடைபெற்ற மாவீரர் அனுஷ்டானங்களை - குறிப்பாக கிழக்குத் தமிழர்கள் - புறக்கணிக்கத் தொடங்கினர்.

இதன்காரணமாகக் கிழக்கில் புலிகள் இனக் குரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

திருகோணமலைச் சம்பவங்கள் இதற்குக் கட்டியம் கூறுகின்றன.

திருகோணமலையில் நடந்த சம்பவங்களின் பின்னணியில் ஜே.வி.பி. செயற்படுவதாகக் கூறப்படுகிறது.

திருகோணமலைச் சம்பவங்களுக்கும், ஜே.விபியினருக்கும எந்தத் தொடர்பும் இல்லை. சிங்கள அமைப்பு என்ற பெயரில் ஓர் அமைப்பு அங்கு செயற்படுகிறது. அதற்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

திருகோணமலை நகர்ப்பகுதியில் புலிக்கொடி ஏற்றப்பட்டதைக் கண்டித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கப் எமது அமைப்பு ஊர்வலமாகச் சென்றபோது, எமது ஆதரவாளர்கள் மீது பொலீஸார் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசி, குண்டாந்தடிப் பிரயோகம்செய்தனர்.

புலிகளுடன் பேசி இறுதித்தீர்வொன்றைக் காண்பதற்கு நாம் எதிர்ப்புக்காட்டவில்லை. தமிழர்களுக்குப் பிரச்சினை இல்லையென்று நாம் கூறவும் இல்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற யோசனையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதுபோல் புலிகள் எமது கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நாம் வற்புறுத்தவும் மாட்டோம்.

இடைக்கால நிர்வாகத்தைச் சட்டபூர்வமாககினால் அது தனிநாட்டுக்கு அடிகோலிவிடும் என்பதே உண்மை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை வழங்கினால் அது தமக்குச் சாதகமான வழிகளைப் பெற்றுத்தரும் என அன்ரன் பாலசிங்கம் லண்டனில் ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஐரோப்பாவுக்கு மேற்கொண்ட விஜயங்களின்போது தமது தரப்பு நியாயங்கள் பற்றி மேற்கத்தைய நாடுகளிடம் வலியுறுத்தி வந்தார். இருந்தும் டென்மார்க், புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்தது.

எனவே, நாட்டு மக்களுக்கு ஜே.வி.பி. வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறது. புலிகள் விரித்திருக்கும் வலையில் சிக்கவேண்டாம். இனரீதியான முறுகல் நிலையை ஏற்படுத்தித் தமிழர்களுக்குப் பாரிய பிரச்சினை இருப்பதாகக் காண்பித்து அதன்மூலம் தமது திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கும் புலிகள் அதை நாடாளுமன்றில் இருந்து விஸ்தரித்துள்ளனர்.

இலங்கையில் தனிநாடு உருவாகிவிட்டது. அதை யாராலும் தடுத்துவிட முடியாது என்ற மாயையை ஏற்படுத்திச் சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதே இதன் பிரதான நோக்கம்.

பிரபாகரன் நிபந்தனையின்றி அரசைப் பேச்சுக்கு வருமாறு அழைப்புவிடுத்துள்ளார். இடைக்கால நிர்வாகம் குறித்து மட்டுமே பேசவேண்டும் என்று அவர் தான் ஒரு நிபந்தனையை விதித்துக்கொண்டு எம்மை எப்படி நிபந்தனையின்றி அழைக்கமுடியும்?

அனைத்துத் தரப்புகளின் விருப்புடன் இறுதித்தீர்வொன்று பற்றிப் பேசித் தீர்வுகாண்பதையே ஜே.வி.பி. விரும்புகிறது - என விமல் வீரவன்ஸ மேலும் தெரிவித்தார். (எ-க)

## லலித்தின் மனைவி ஸ்ரீமணி நேற்று கொழும்பில் காலமானார்!

பிரபல அரசியல்வாதியான அமரர் லலித் அத்துலத்முதலியின் மனைவியும், முன்னாள் அமைச்சருமான ஸ்ரீமணி அத்துலத்முதலி தனது 58ஆவது வயதில் நேற்று கொழும்பில் காலமானார்.

புற்றுநோய்வாய்ப்பட்ட நிலையில் கடந்த இரு மாதங்களாகக் கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த ஸ்ரீமணி அத்துலத்முதலி நேற்று அதிகாலை மரணமானார்.

தமது கணவரான முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் ஜனநாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணியினூடாக இவர் அரசியலில் பிரவேசித்தார். அக்கட்சியின் தலைவியாக விளக்கினார்.

1994இல் நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு, பட்டியலில் முதலாவது இடத்தைப்பெற்று வெற்றியீட்டி எம்.பியான அவர், அப்போதைய அரசியல் போக்குவரத்து, சுற்றாடல் மற்றும் மகளிர் விவகார அமைச்சராக விளங்கினார்.

1998இல் அமைச்சுப் பதவியை இழந்த அவர், தொடர்ந்து 2000ஆம் ஆண்டுவரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறவுள்ளன. (எ-க)

## வாழைச்சேனையில் ஆணின் சடலம் மீட்பு!

ஏறாவூர்,டிசெ.2

வாழைச்சேனை பொலீஸ் பிரிவுக்குபட்ட நாவலடி பள்ளக்காட்டுக்குளம் பகுதியில் ஆண ஒருவரின் சடலத்தை வாழைச்சேனைப் பொலீஸார் நேற்றுக்காலை மீட்டுள்ளனர்.

நாவலடிப் பிரதேச பற்றைக் காடொன்றினுள் சடலம் ஒன்று காணப்படுவதாக வாழைச்சேனைப் பொலீஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து அங்குசென்ற பொலீஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் ஆண் ஒருவருடையது என்றும் சடலம் இதுவரை அடையாளம் காணபபடவில்லையென்றும் வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதறகாக சடலம் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலத்தை எவரும் உரிமைகோராத நிலையில் அரச செலவில் அது அடக்கம் செய்யப்படவுள்ளதாகவும் வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர். (எ-க)

## குருநகரில் வன்முறைகள் தொடர்ந்தால் பொலீஸார் முழுப்பலத்தையும் பிரயோகிப்பர்

### உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வானகுரு எச்சரிக்கை

குருநகர் மற்றும் திருநகர் பகுதிகளில் இளைஞர் குழுக்கள் மீண்டும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டால், பொலீஸார் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்துவர்.

இவ்வாறு கடும் தொனியில் எச்சரித்துள்ளார் வடபகுதி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வானகுரு. குருநகர் மற்றும் திருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலைச் சமரசம் செய்து வைப்பதற் காக நேற்றுக் குருநகர் லொயலாஸ் திருமண மண்டபத்தில் மதத்தலைவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

குருநகர், திருநகர் பகுதி இளைஞர்கள் சில தினங்களாக கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த இளைஞர்களை சமரசம் செய்யும் முயற்சியில் பொலீஸாரும், இராணுவத்தினரும் ஈடுபட்டிருந்தனர். ஆனால், இளைஞர்கள் இதனைப் பொருட்படுத்தவில்லை.

வன்முறைச் சம்பவங்களில் இளைஞர்கள் ஈடுபட்ட போதெல்லாம் பொலீஸார் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்தவில்லை.

இளைஞர் குழு வன்முறைகளைக் கடைப்பிடித்தால் பொலீஸார் தங்களுக்குரிய சட்டத்தைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட அனைவரையும் தண்டிப்பர். குறிப்பாக வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் உடனடியாக கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவர்.

இயல்பு நிலை திரும்பும்வரை பொலீஸாரும், இராணுவத்தினரும் அந்தப் பகுதிகளில் இரவு பகலாக கடமையில் ஈடுபடுவர் - என்றும் அவர் தெரிவித்தார். (எ-7)

## நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்களின் பிரச்சினைகள் நேற்று விரிவாக ஆராய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.2

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தவர்களுக்கான செயற்திட்டத்தின் ஆசிய, பசுபிக் பிரிவின் பிரதிநிதிகள் நேற்று ஆராய்ந்தனர்.

இவ் அமைப்பின் பிரதிநிதிகளான பிட்டர் கோன், டேவிப் பிஷர் மற்றும் மனித உரிமைகளுக்கான ஆலோசகர் மாரிய தோமஸ் ஆகியோர் அடங்கிய குழுவே நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்கள் பற்றி ஆராய்ந்தனர்.

யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியைச் சந்தித்த இக்குழுவினர், இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்க வேண்டிய உதவிகள் பற்றியும் - அவர்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் செயலகத் திட்டபபணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை உட்பட பிரதேச செயலர்களும் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் அதன் அலுவலர்களுடன் கலந்துரையாடிய இக்குழுவினர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்தித்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர். (எ-5)

## கடல்வேந்தனின் வித்துடல் சாட்டியில் நேற்று விதைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

01.08.1997 அன்று வவுனியா, நம்பைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலின்போது விழுப்புண் அடைநது சிகிச்சை பெற்று, 28.11.2004 வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் கடல்வேந்தனின் வித்துடல் நேற்றுமாலை சாட்டி துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபை திறந்த வெளியரங்கில் நினைவஞ்சலிக் கூட்டம், தீவகத் தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் செல்வம் தலைமையில் நடைபெற்றது.

நினைவுரைகளை ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.லோகநாதன், ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், இம்ரான் பாண்டியன் படைகளின் போராளியான கார்வேந்தன் ஆகியோர் நினைவஞ்சலி உரை நிகழ்த்தினர். பெருமளவு மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், ஊர்காவற்றுறை செருக்கன் சந்தி, புளியங்கூடல் சந்தி, கெட்டில் வேலணை ஊடாக சாட்டி துயிலும் இல்லத்தை வித்துடல் சென்றடைந்தது. வழி நெடுகிலும் மக்கள் திரண்டு நின்று மலர் அஞ்சலி செலுத்தினர்.

சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரரின் பெற்றோர் அஞ்சலி செலுத்தினர். இந் நிகழ்வில் பொதுமக்கள், போராளிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (எ)

## இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியோருக்கு புலம்பெயர்ந்தோர் அமைப்பினால் நிதியுதவி

இந்தியாவில் இருந்து இவ்வருடம் ஜனவரிமுதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் தாயகம் திரும்பியோருக்கான கொடுப்பனவுகளை வழங்க சர்வதேச புலம்பெயர்ந்தோருக்கான அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தியாவில் இருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியோருக்கு மீளத் தொழிலை ஆரம்பிப்பதற்கான தொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென மேற்படி அமைப்பினால் 6 மாதங்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 400 ரூபா வீதம் உதவித்தொகை வழங்கப்பட்டுவருகிறது.

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல ஏப்ரல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக உதவியுடன் இந்தியாவில் இருந்து விமானம் மற்றும் படகுகள் மூலம் தாயகம் திரும்பியவர்கள் அதற்கான ஆவணங்களுடன் அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் ஊடாக இல.38, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள சர்வதேச புலம்பெயர்ந்தோருக்கான அமைப்புடன் தொடர்பு கொள்ளலாம் என அந்த அமைப்பின் திட்ட முகாமையாளர் அ.அ.உதய குமார் தெரிவித்தார். (எ-5)

## வாள்வெட்டுக்கு இலக்கான சிப்பாய் உயிரிழந்தார்

நுணாவிலில் கடந்த வியாழக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டிற்கு இலக்கான இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்களில் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமானார்.

குருநாகல், சியம்பலகஸ் வெவவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் எம்.ரூபசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த சமயம் மரணமானார்.

## பாதுகாப்பு அமைச்சுச் செயலராக ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா

கொழும்பு,டிசெ.2

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனா நேற்றுக்காலை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.

இதுவரை காலம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய சிறில் ஹேரத் இனிமேல் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய செயலாளர் பதவியேற்றபின் நேற்றுக்காலை பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்றும் நடைபெற்றது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக டிரோன் பெர்னாண்டோ கூடிய விரைவில் பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

# விமானம் தரையிறங்குகையில் விபத்து 31 பயணிகள் பரிதாபகரமாக உயிரிழப்பு!

## இந்தோனேஷியாவில் சம்பவம்

ஜகார்த்தா,டிசெ.2

இந்தோனேஷியாவின் மத்திய ஜாவா மாநிலத்தில் ஏற்பட்ட விமான விபத்தில் குறைந்தது 31பேர் உயிரிழந்தனர். 61 பேர் படுகாயமடைந்தனர்.

மழையினால் ஈரமாகியிருந்த ஓடுபாதையில் விமானம் தரையிறங்க முற்பட்ட சமயம், பிடிமானம் இல்லாது சில்லுகள் வழுக்கிச் சென்றதில் விமானம் விபத்துக்குள்ளானது. அந்தப் பயணிகள் விமானத்தில் 146 பயணிகளும் 7விமானப் பணியாளர்களும் இருந்தனர்.

இந்த விபத்தில் விமான நிலையத்தில் இருந்த MD-82 லயன் எயார் நிறுவனத்திற்குச் சொந்தமான விமானமே விபத்துக்குள்ளானது.

"இரவு 8.30 மணியளவில் விபத்து இடம் பெற்றது. மொத்தம் 31பேர் உயிரிழந்தனர். 61பேர் காயமடைந்தனர். வேறு 37பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்" - என்றார் விமான நிலைய வர்த்தக நிர்வாகி ரூடி பற்றியாண்டோ. விபத்தில் காயமடைந்தவர்கள் சோலோ நகரில் உள்ள வைத்தியசாலைகளில் முழுவதும் பரந்து அனுமதிக்கப்பட்டுள்ளனர். விமானம் ஒன்றின் முகப்புப் பகுதியும் சேதமடைந்தது.

"விமானம் ஓடுபாதையில் வழுக்க ஆரம்பித்ததும் அதிலிருந்த மக்கள் அனைவரும் அல்லாஹ் அக்பர் (கடவுள் மேலானவர்) என்று குரல் எழுப்பினர். இறுதியில், விமான ஓடுபாதைக்கு அருகிலிருந்த சுடுகாட்டு சுவரில் மோதிச் சின்னாபின்னமாகிய பின்னரே விமானத்தின் பயணம் முடிவுக்கு வந்தது" - என்றார் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர். (எ-க)

## அமெ. உள்நாட்டு பாதுகாப்புச் செயலர் இராஜினாமா!

நியூயோர்க்,டிசெ.2

அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலர் டொம் ரிட்ஜ் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தனது தனிப்பட்ட காரணங்களுக்காகவே அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின்னர் அதிபர் புஷ்ஷினால் நியமிக்கப்பட்ட முதலாவது உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலாளர், ஆலோசகர் அவர்.

அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்தபோதும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் ஒரு லட்சத்து 80 ஆயிரம் திணைக்களங்களின் தலைமைப் பதவியை வகிப்பார். அமெரிக்காவின் பாதுகாப்புக்கான கட்டமைப்பை மீளமைக்க புஷ் விரும்புகிறார் என்பதால் இவர் பதவி விலகினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-க)

# முஷாரப் தொடர்ந்து பதவி வகிக்க பாகிஸ்தான் நாடாளுமன்றம் அனுமதி

பாகிஸ்தான்,டிசெ.2

பாகிஸ்தான் ஜனாதிபதியும், இராணுவத் தளபதியுமான பர்வேஷ் முஷாரப் தொடர்ந்து இராணுவத் தளபதியாக பதவி வகிக்க வேண்டும் என்ற பிரேரணை பாகிஸ்தான் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முஷாரப் பாகிஸ்தான் இராணுவத் தளபதியிலிருந்து விலகுவதாக தெரிவித்துள்ள நிலையில் இப்பிரேரணை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசியல் அமைப்பின்படி நாடாளுமன்றில் பிரரேரணை ஒன்று முன்வைக்கப் பட்டால் அது முன்வைக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி ஒப்பமிட வேண்டும்.

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தென்னமரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளதால் இப்பிரேரணையில் பாகிஸ்தான் உபஜனாதிபதி கைச்சாத்திட்டுள்ளார். (8-204)

# அமெரிக்காவுக்கு எதிரான போர் தொடர்ந்தும் நடத்தப்படும்

## அல்கெய்டா பிரதித் தலைவர் அறிவிப்பு

கட்டார்,டிசெ.2

தமது கடைசி உயிர் இருக்கும்வரை அமெரிக்காவுக்கெதிரான போராட்டம் தொடர்ந்தும் நடத்தப்படுமென அல்-கெய்டா அமைப்பின் பிரதித்தலைவர் அல்-ஷர்காவ் தெரிவித்துள்ளார்.

அல் - ஜெஸீராத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட ஷர்காவியின் வீடியோ ஒளிநாடாவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த ஒளிநாடா மூலம் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

அமெரிக்கர்களின் பாதுகாப்பு என்பது புஷ்ஷினதோ ஹெரியினதோ ஏன் அல் - கெய்டா அமைப்பினது கைகளிலோ இல்லை. அவர்களது பாதுகாப்பு அவர்களது சொந்தக் கைகளிலேயே உள்ளது.

நீங்கள் புஷ்ஷையோ, ஹெரியையோ மற்றும் எந்தப் பிசாசையாவது தெரிவு செய்யுங்கள். ஆனால் எனக்குள்ள கவலை என்னவென்றால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்க வேண்டும் என்பதுதான்.

நான் இறுதியாக ஒரு சமாதானமான ஆலோசனை ஒன்றை முன்வைக்கிறேன். அதில் முஸ்லிம்களுடன் அமெரிக்காவின் ஈடுபாடு தொடர்பாக இரண்டு தெரிவுகளே உள்ளன.

முஸ்லிம்களுடன் இணைந்து செல்வதா அல்லது முஸ்லிம்களை முற்றுமுழுதாக அழிப்பதா இரண்டில் எது என்பதை அமெரிக்கா தான் தீர்மானிக்க வேண்டும்.

ஆனால், நாங்கள் பொறுமையும் சகிப்புத் தன்மையும் உடையவர்கள் என்பதை அமெரிக்கா புரிந்து கொள்ள வேண்டும். எமது கடைசி உயிருள்ள வரை அமெரிக்காவைத் தாக்குவோம் எனத் தெரிவித்தார்.

இந்த ஒளிநாடாவை கடந்த திங்கட்கிழமை தாம் பெற்றுக்கொண்டதாகவும், இதிலுள்ள முக்கியமான விடயங்களை மட்டுமே ஒளிபரப்புவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அல்-ஜெஸீராவின் பேச்சாளர் தெரிவித்தார்.(8-204)

# ஜெயேந்திரரின் பிணைமனு விசாரணை ஒத்திவைப்பு!

சென்னை,டிசெ.2

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் நிர்வாகி சங்கரராமன் கொலைவழக்கில் கைதாகியுள்ள காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த பிணைமனு மீதான விசாரணை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்விசாரணை தொடர்பாக அடுத்த ஓரிரு தினங்களில் தீர்ப்பை உயர் நீதிமன்ற நீதிபதி வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

கணக்காய்வாளர் ராதாகிருஷ்ணன் மீதான கொலை முயற்சி வழக்கின் பிணைமனுவை நாளை விசாரணை செய்ய நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

சங்கரராமனின் கொலை வழக்குத் தொடர்பான முக்கிய ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாக அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

சங்கரராமனின் கொலை வழக்கில் முக்கியமானவராகக் கருதப்பட்ட ஸ்ரீரங்கம் உஷா பொலீஸில் நேற்றுமுன்தினம் ஆஜராகி, சுமார் 4 மணிநேரம் பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

"தமக்கும் ஜெயேந்திரருக்கும் குரு, சிஷ்ய உறவு மாத்திரமே இருக்கின்றது" - என உஷா தெரிவித்தார். தாம் ஒரு புற்றுநோயாளி எனவும் -

கணவரால் கைவிடப்பட்டவர் எனவும் - அவர் குறிப்பிட்டார்.

மருத்துவ உதவி கோரியே காஞ்சிமடத்தை அணுகினார் என உஷா பொலீஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

சங்கராச்சாரியாருடன் தினமும் தொலைபேசியில் பேசினார் என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ள உஷா, ஆசீர்வாதம் கோரியே ஜெயேந்திரருடன் தொலைபேசியில் உரையாடினார் எனத் தெரிவித்தார்.

சங்கராச்சாரியார் ஜெயேந்திரரின் கைதுக்கு தாமே முழுப் பொறுப்பு எனத் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்தார்.

ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்டது கட்டாயத்தால் எடுக்கப்பட்ட வேதனையான முடிவு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் காரணங்களோ, தனிப்பட்ட விரோதமோ அவரின் கைதுக்கு காரணம் அல்ல என புதுடில்லியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் முதலமைச்சர் ஜெயலலிதா கூறினார்.

பாரதீய ஜனதாக் கட்சியினர் நடத்தும் ஆர்பாட்டங்கள் தவறான வழிகாட்டுதலின் பேரில் நடப்பவையாக உள்ளன என்றும் முதல்வர் குற்றஞ்சாட்டினார்.

சங்கராச்சாரியார் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து பா.ஜ.க. மற்றும் இதன் சகோதர ஹிந்துத்துவ அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளன.

தமிழ்ப் பிராமணர் சங்கமும் நேற்றுமுன் தினம் ஜெயேந்திரரின் கைதைக் கண்டித்து தமிழ்நாட்டின் சில நகரங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியதாகச் செய்திகள் தெரிவித்தன. (க)

# சூடானுக்கு நிதியுதவி வேண்டும் ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை

நியூயோர்க்,டிசெ.2

சூடான் நாட்டில் கடந்த தசாப்தகால உள்நாட்டு மோதலுக்கு முடிவு காணப்படுவதற்கான முயற்சிகளுக்கு மத்தியில், அங்கு அடுத்தவருடம் தாம் மேற்கொள்ளவிருக்கும் உதவிப் பணிகளுக்கு ஒன்றரைக்கோடி அமெரிக்க டொலர்கள் நிதியுதவி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் வடக்கில் இருக்கும் அரசுடன் ஒரு சமாதான உடன்படிக்கைக்கு அண்மித்துக் கொண்டிருக்கும் தென்பகுதியின் நிவாரண மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தப் பணத்தில் மூன்றில் ஒருபகுதி பயன்படுத்தப் படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச ஆதரவு ஆயுதக்குழுவுடன் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட மோதலின் விளைவாக 15 லட்சம் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்கள் தற்போது நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள தார்பூர் பிராந்தியத்தில் அகதிகளாக வாழ்கின்றனர். எனவே, இப்பிராந்தியத்தில் அவசர உதவிகளுக்காகவும், இந்நிதியிலிருந்து பெருமளவு பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (எ-க)

# எதிர்காலம் தொடர்பான பேச்சுக்களில் இருந்து உக்ரைன் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் விலகல்!

கியேவ்,டிசெ.2

உக்ரைனின் எதிர்காலம் தொடர்பான பேச்சுக்களில் இருந்து விலகிக்கொள்வதென்று எதிர்க்கட்சியான லிபரல் கட்சிப் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

பதவி விலகும் ஜனாதிபதி லியோனிட் குச்மாவும் பிரதம மந்திரியும் அதிகாரிகளும் இப்பேச்சுக்கள் மூலம் நாட்டு மக்களை ஏமாற்ற முயல்கின்றனர் - முயற்சிக்கின்றனர்- என்று எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கிடையில் -

உக்ரைனின் நாடாளுமன்றமும் உச்ச நீதிமன்றமும் இந்த விவகாரம் தொடர்பாக அவற்றின் முடிவுகளை நேற்று வெளியிடுமென எதிர்பார்க்கப்பட்டது.

அதேவேளை -

போலாந்து மற்றும் உக்ரைனிய ஜனாதிபதிகளும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின விசேட தூதுவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரப் பிரிவின் தலைவரும் நேற்று உக்ரைன் சென்றனர்.

உக்ரைனின் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சினைக்கு நாட்டு மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் சமாதான அடிப்படையிலான தீர்வுகாணப்படவேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டப்ளியூ புஷ் ஒட்டாமாவில் வைத்துத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பிரதமர் விக்ரோ ஜனுகோவிச்சுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற நேற்றுமுன்தினம் உக்ரைன் நாடாளுமன்றம் தவறியுள்ளது.

இவ்விவகாரத்தின் விவாதம் மிகவும் முறுகலான நிலையை எட்டியுள்ளதால் நாடாளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டன.

அத்தோடு, உக்ரைன் நாட்டு வங்கிகளிலிருந்து பணத்தை மீள எடுப்பதை மட்டுப்படுத்தும் வகையிலான அவசர நடவடிக்கைகளை அந் நாட்டின் தேசிய வங்கி மேற்கொண்டுள்ளது.

அரசியல் முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் பொருளாதாரச் சீர்குலைவுகள் குறித்து எச்சரிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்திரமற்ற நிலைகுறித்து அச்சங்கொண்ட உக்ரைனிய மக்கள் பலர் பணவீக்கம் தொடர்பான கவலைகள் காரணமாக மீண்டும் மீண்டும் வங்கிகளில் இருந்து தமது பணங்களை எடுத்து வருகிறார்கள் என அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை -

நாட்டின் கிழக்கிலுள்ள -ரஷ்ய மொழி பேசும் - பல மாநிலங்களிலிருந்து சுயாட்சிக்கான அழைப்பு எடுத்துள்ளமை குறித்து தாம் குற்றவியல் புலனாய்வுகளை ஆரம்பித்துள்ளனர் என உக்ரைன் பாதுகாப்புப் படையினர் கூறியுள்ளனர்.

நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதிக்கும் எந்த முயற்சிக்கு எதிராகவும் பதவி விலகும் அதிபர் லியோனிட் குச்மா எச்சரிக்கை விடுத்துள்ளார். (க)

# உலக எய்ட்ஸ் தினம் நேற்று அனுஷ்டிப்பு

கேப்டவுன்,டிசெ.2

உலக எய்ட்ஸ் தினம் நேற்று உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. இந்தத் தினத்தில் பொஸ்வானா நாட்டில் எய்ட்ஸ் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அச்சப்படும் அளவுக்கு அதிகரித்துச் செல்கிறது என அந்த நாட்டு அதிபர் தெரிவித்தார்.

பி.பி.ஸி. செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரசாரத்திற்காக 'மைக்ரோ சொப்ற்' நிறுவன அதிபர் பில்கேட்ஸ் நிதியம் பெருந்தொகையான பணத்தை வழங்கியுள்ளது. எனினும், கிடைக்கும் நிதியுதவி போதாது என ஐ.நா. தெரிவிக்கிறது.

எய்ட்ஸ் ஓர் ஆள்கொல்லி நோயாக இருந்த போதும் அதற்கெதிராக இதுவரை சரியான மருந்துகள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை.

## உலக அரங்கில்

# 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து




கனடாவில் வசிக்கும் *பகீரதன் - அஜித்தா*
தம்பதிகளின் செல்வப்புதல்வி *துஷ்யா*
தனது 2ஆவது பிறந்த நாளை இன்று (2.12.2004) வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். செல்வி துஷ்யாவை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா ,அம்மப்பா, மாமாமார்கள், பூமாமா (துவாரகன்), தங்கமாமா (ராகவன்), ஆசை மாமா (பிருந்தாபன்), சித்திமார், பூட்டன்மார், பூட்டிமார், சித்தப்பாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார், அன்ராமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மல்லாகம் காளி அம்பாள் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென மனமார வாழ்த்துகின் றார்கள்.

*தகவல்: அம்மப்பா*
*பொ.குலசிங்கம் (ராசா).*

"அஜி இல்லம்"
காளிகோவில் வீதி,
மல்லாகம். T.P.: 077 6199398 (C-39362)

# முதலாவது பிறந்ததி[ன] வாழ்த்து



கோப்பாய் தெற்கு, கோப்பாயைச் சேர்ந்தவர்களான
**திரு.திருமதி**
**திலகரத்தினம்**
**கமலாம்பிகை**
**தம்பதிகளின்**
செல்வப் புதல்வன்

## திலக்ஷன்

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (02.12.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்

**செல்வன் திலக்ஷனை அன்பு அம்மா, அப்பா, அப்பம்மா, அம்மப்பா, ஐயா, மாமன்மார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சிறப்புடன் பெருவாழ்வு வாழ்க என மனமுவந்து வாழ்த்துகின்றார்கள்.**

"செல்வம் இல்லம்",
பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**அன்பு அப்பா,**
**அம்மா.**

(39162) (32-19-44-24)

# கேள்வி அறிவித்தல்

## நெடுந்தீவுப் பிரதேச சபை

**நெடுந்தீவு பிரதேச சபையின் சந்தை, மீன் சந்தை, இறைச்சிக்கடை ஆகியன வற்றை 2004ஆம் ஆண்டு முழுவதும் நடத்துவதற்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

கேள்விப் பத்திரங்கள் வழங்கல்: 2004.12.06 ஆம் திகதி தொடக்கம் 14.12.2004 பிற்பகல் 4.00 மணிவரை
கேள்விப் பத்திரங்கள் ஏற்றல்: 15.12.2004 பிற்பகல் 2.00 மணிவரை
கேள்விப் பத்திரங்கள் திறத்தல்: 16.12.2004 பிற்பகல் 3.00 மணிவரை

| குத்தகையின் தன்மை | கேள்விப்பத்திரப் பணம் மீளளிக்கப்படாதது | கேள்வி வைப்பு மீளளிக்கக்கூடியது | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. மீன் சந்தை | 100.00 | 500.00 | 4000.00 |
| 2. இறைச்சிக்கடை | 100.00 | 1000.00 | 12000.00 |

**மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் திறக்கும் நேரத்தில் கேள்விகாரர் சமுகமளித்திருக்கலாம். முன்னைய வருடங்களில் குத்தகை நிலுவையுள்ளோருக்குக் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. பிரதேச சபையின் கொல்களத்தில் அன்றி மாடுகளை அனுமதியின்றி வெட்டுவதும் இறைச்சிக்கடையிலன்றி இறைச்சி விற்பனை செய்வதும் சட்டவிரோதமானதாகும். விண்ணப்பதாரர் தமது கேள்விப்பத்திரங்களை *"செயலாளர், பிரதேச சபை, நெடுந்தீவு"* எனும் முகவரியிட்டு தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் நேரிலோ சேர்க்கலாம்.**

**பொன்னம்பலம் தில்லைநாதன்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, நெடுந்தீவு.**

**திகதி: 02.12.2004**

(சி-39425) (24-19-44)

# SRILANKAN LAW COLLEGE ENTRANCE

## இலங்கை சட்டக்கல்லூரி அனுமதி 2005

### கலந்துரையாடல் வகுப்புக்கள்

- ★ A/L இல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் O/L பரீட்சையில் தமிழ் சித்தியுடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியடைந்தவர்களும் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
- ★ ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதம் இப்பரீட்சை நடைபெறும். விரும்பிய மொழிகளில் பரீட்சைக்குத் தோற்றலாம்.
- ★ விரிவுரைகள் 12.12.2004 இல் ஆரம்பமாகின்றன. ஏனைய விவரங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

*விவரங்களுக்கு :* **S.அருள்நங்கை**
**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(39168) (32-19-44-24)

# ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

மேற்குறிப்பிடும் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ரூபா 10/- செலுத்திச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும், "பொதுமுகாமையாளர், பனை, தென்னை வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கம், வைத்தியசாலை வீதி, ஊர்காவற்றுறை" என்று முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலமே விண்ணப்பிக்க வேண்டும்.

01. தட்டெழுத்தாளர் (31/99 சுற்றிக்கைக்கு அமைய)

305 / 15 3500/- - 4850/- / 65x10 - 70x10

அ) *கல்வித் தகைமைகள்:* க.பொ.த. (சா.த.) சான்றிதழ் தொடர்புபட்ட மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியும் சிங்கள / தமிழ் தட்டெழுத்து நிமிடத்திற்கு 20 சொற்கள் அல்லது 30 சொற்கள்.
ஆ) *வயதெல்லை:* 18-45 வரையாகும்.
இ) சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

*கணனிப் பயிற்சி பெற்றிருப்பின் அவை மேலதிக தகமையாகக் கணிக்கப்படும்.*

விண்ணப்ப முடிவு திகதி: 15.12.2004

**பொதுமுகாமையாளர்,**
பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
வைத்தியசாலை வீதி, ஊர்காவற்றுறை.

(சி-39423) (24-19-44)

# 31ஆம் நாள் நினைவும்

## சபிண்டீகரண அழைப்பும்



கடந்த 03.11.2004 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

## திருமதி செல்லம்மா இராசரத்தினம்

**அவர்களின் அந்தியேஷ்டி, சபிண்டீகரண கிரியைகள் நாளை (03.12.2004) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**கணவர், மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
T.P.: 226-3013

*செல்லம் மில்,*
*கரவெட்டி,*
(சி-39426)(26-19-44-24)

## சமுர்த்தி வங்கியில் சிறுவர் கணக்கு

யாழ்ப்பாணம்,டிச.2

யாழ். கிழக்கு சமுர்த்தி வங்கிக் கிளை பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கான 'சிசுரக்க' என்னும் கணக்குத் திட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளினை மேற்கொண்டுவருவதாக யாழ். கிழக்கு சமுர்த்தி வங்கிக்கிளை முகாமையாளர் எஸ்.கீயூரன் தெரிவித்துள்ளார். (8-190)

## பழைய பூங்கா வீதி பலத்த சேதம்

யாழ்ப்பாணம்,டிச.2

சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதி நீண்டகாலமாகக் குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால் இவ்வீதியூடாகப் போக்குவரத்துச் செய்யும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மழைகாலங்களில் இவ்வீதியூடாகப் பயணஞ் செய்யும் பொதுமக்கள், மாணவர்களின் ஆடைகள் மீது குழிகளிள் தேங்கிநிற்கும் மழை நீரை வாகனங்கள் தெறித்துச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. (8-190)

# தேவை

இரும்புக்கடை வியாபாரத்தில் அனுபவமுள்ள 35 வயதுக்கு மேற்பட்ட ஆள்கள் தேவை.

தொடர்பு:- **இலக்கம் 55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

(39163) (46)

# ஆசிரியர் தேவை

- ✪ தரம் 9, 10, O/L வகுப்புகளுக்குத் தமிழ், சமயம், விஞ்ஞானம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. 04.12.2004 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நேரில் வரவும்.
- ✪ தரம் 6 முதல் O/L வரை புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**CASIO INSTITUTE**
G.P.S. றோட், கல்வியங்காடு.

(39158) (24)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 1977 – 12 – 27

இறப்பு 2001 – 12 – 02

## செல்வி நிர்மலன் கவிதா

(யா/டிறிபேர்க் கல்லூரி பழைய மாணவி)

*அபரபக்க துதியை 28/11/2004*

**எழுதும் வரிகளே**
**உருகிக் கசியும்**
**கவி (தை) நீ....!**
**உன் நினைவில்**
**நீளும் நாள்களை**
**நெஞ்சில் சுமக்கும்...**

**– குடும்பத்தினர்.**

இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.

(39166) (26-19-44-24)

உதயன்

# விபரீதம் நேர்ந்தால் ஜனாதிபதியே பொறுப்பு

☆ இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை.

☆ மாவீரர் தின உரையில் 'தமிழர் தாயகம்' பற்றி விடுதலைப் புலிகளின் தலைவர் குறிப்பிடுகின்றார். ஆனால், இலங்கையில் வரலாற்று ரீதியாக தமிழர் தாயகம், தமிழர் பிரதேசம் என்று எதுவுமே இருக்கவேயில்லை.

- இப்படிக் கூறியிருக்கின்றது ஜாதிக ஹெல உறுமய. பௌத்த சிங்கள மேலாண்மை வாதத்தின் உச்சியில் நின்று பிதற்றுகின்றது அந்தக்கட்சி. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல் கதைவிட முயல்கிறது அது.

தமிழரின் தாயகத்தை ஏற்று, அங்கீகரிக்க மறுக்கும் ஹெல உறுமய, தமிழரின் தேசியத்தையும் அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் ஏற்று அங்கீகரிக்கும் என எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

பௌத்த, சிங்கள பேரினவாதத்தில் ஊறித் திளைத்திருக்கும் ஜே.வி.பியும் கூட இந்த நிலைப்பாட்டில்தான் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

தென்னிலங்கையின் இருபெரும் சிங்களக் கட்சிகளான ஐ.தே.கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினை விவகாரத்தில் சரியோ, பிழையோ மேற்படி ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி.ஆகியவற்றிலிருந்து சற்று வேறுபட்டு நிற்கின்றன. பட்டுத்தெளிந்ததால் கிடைத்த அனுபவத்தின் காரணமாக அதுவந்திருக்கலாம்.

ஆனால், அவை தமிழருக்கு இந்த நாட்டில் இனப்பிரச்சினை ஏற்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்கின்றன. தமிழரின் தேசியத்தையும்,தாயகத்தையும் கூட வேறு வழியின்றி ஒப்புக்கொள்ள வேண்டிய இக்கட்டில்தான் அவை உள்ளன.

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை எந்த மட்டத்தில் அங்கீகரிப்பது என்பதில்தான் அவை குழம்பிப் போயிருக்கின்றன.

இப்படிப் பெரும்பான்மைக் கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ள - இனப்பிரச்சினையின் மூலாதாரமான - விவகாரங்களை அப்படி ஒன்று இல்லவே இல்லை என்று சிறிய கட்சிகள் மூர்க்கமாக எதிர்க்கும் போது அந்த சிறிய கட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் துர்ப்பாக்கிய நிலைமை தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளுக்கு இடமளிக்கப் பட்டால் - தென்னிலங்கையில் இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சி வெடிக்கும் என்று ஜே.வி.பி. எச்சரித்திருப்பது கவனிக்கத்தக்கது.

இச்சமயத்தில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக் காட்டிய ஒரு விவகாரமும் நோக்கற்பாலது.

"விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சைத் தொடங்கலாம் என்று ஜனாதிபதி குமாரதுங்கவே எங்களிடம் ஒப்புக் கொண்டுள்ளார். ஐ.தே.கட்சியின் நிலைப்பாடும் அதுவே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்களாகிய நாங்களும் அதையே வலியுறுத்துகின்றோம். எனவே, இந்த யோசனைகளின் அடிப்படையில் உடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்ற பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்கொண்டுவந்தால் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிட்டுவது உறுதி" - என்று சுட்டிக்காட்டியிருந்தார் கஜேந்திரகுமார்.

இந்த முயற்சியை ஐ.தே.கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், தமிழ்க் கூட்டமைப்பு போன்றவையும் நிச்சயம் ஆதரிக்கும். ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற பேரினவாதக் கட்சியினரே - ஒரு சிறிய பகுதியினரே - எதிர்ப்பர் என்றும் அவர் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஆக, இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பகுதியினரின் ஆதரவைப் பெறக்கூடிய ஒரு விடயத்தையே, முன்னெடுக்க முடியாமல் தவிக்கின்றார் இலங்கை நாட்டின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க.

அதற்குக் காரணம் என்ன?

தன்னுடைய சுயலாப அரசியலுக்காக - அரசியல் அதிகாரத்தில் தான் நீடிக்கவேண்டும் என்பதற்காக - பௌத்த, சிங்களப் பேரினவாதப் போக்குடைய அரசியல் சக்திகளோடு ஜனாதிபதி குமாரதுங்க கைகோர்த்தார். அவற்றின் உதவியுடன் அரசியல் அதிகாரத்தைப் கைப்பற்றுவதற்காக அவற்றையும் அரசியலில் முன்நகர்த்தினார் - முன்நிறுத்தினார் - அவர்.

அதுவும் இனப்பிரச்சினைக்கு எவ்வகையிலேனும் அமைதித்தீர்வு ஒன்றைக் கண்டாக வேண்டிய கட்டாயமும் பொறுப்பும் இலங்கை அரசின் மீது சுமத்தப்பட்டிருந்த சமயத்தில், அந்த அரசைக் கைப்பற்றுவதற்கு சிங்கள, பௌத்த மேலாண்மைவாத சக்திகளை அதிகாரச்செல்வாக்கில் முன்னுக்குக் கொண்டுவந்து தள்ளி நிறுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

இந்தப் பேரினவாதிகளின் வெறிப்போக்கால் தற்போதைய சமாதான முயற்சி தோற்றுப்போகுமானால், அந்தப் பேரினவாதிகளுக்கு உயர்ந்த இடமும் செல்வாக்கும், அதிகாரமும் அளித்து முன்நிறுத்திய ஜனாதிபதி குமாரதுங்கவே அந்த முயற்சிகள் தோற்றுப்போனதற்கும், அதன் விளைவுகளுக்கும் தனித்துப் பொறுப்பேற்க வேண்டியவராவார்.

மீள்குடியமர்வுக் கொடுப்பனவை உடன் வழங்குமாறு

# வரணி, இடைக்குறிச்சிப் பிரதேச மக்கள் செயலகத்தின் முன்பாக மறியற்போர்

யாழ்ப்பாணம்,டிசெ.2

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 25ஆயிரம் ரூபாவை உடன் வழங்கக் கோரி தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வரணி, இடைக்குறிச்சி மக்கள் நேற்று யாழ்.செயலகம் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வரணி, இடைக்குறிச்சிப் பிரதேச அபிவிருத்திச் சங்கங்களின் ஏற்பாட்டில் காலை 7.45 மணிமுதல் முற்பகல் 9 மணிவரை இடம்பெற்ற இந்த மறியற்போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து சென்று தற்போது மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு யாழ். செயலகத்தினால் மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

அந்த அடிப்படையில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சுமார் 60 கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வரணி, இடைக்குறிச்சிப் பகுதிகளுக்கு இதுவரை இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இதனைக் கண்டித்தே மறியல் போராட்டம் இடம்பெற்றது.

இதனால் செயலகத்திற்குப் பணிக்காக வருகை தந்த அலுவலர்கள் சிறிது நேரம் வீதியில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து யாழ்.செயலகத்தில் இயங்கும் 'நிக்கொட்' நிறுவனத்தின் உதவித் திட்டப் பணிப்பாளர் க.நவரட்ணராஜா மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி மீள்குடியமர்வுக் கொடுப்பனவை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக உறுதியளித்ததையடுத்து மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

இறுதியில் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கான மகஜர் ஒன்று 'நிக்கொட்' உதவித் திட்டப்பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது. இதன் பிரதிகள் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(10-5-117-139)

# பட்டதாரிகளுக்கான பயிற்சிநெறிக்கு 230 பேர் இதுவரை தோற்றவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வரும் இரண்டாம் கட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கான பயிற்சி நெறிக்கு பல பட்டதாரிகள் சமுகமளிக்கவில்லை என்பது தற்போது தெரிய வந்திருக்கிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் தொடக்கம் யாழ்.மாவட்டத்தில் உள்ள 32 பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வரும் இப் பயிற்சிநெறிக்கு ஆயிரத்தி அறுநூறுக்கு மேற்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஆனால், தற்போது இவர்களில் இருநூற்றுமுப்பது பேர் இப் பயிற்சிநெறிக்கு இதுவரை சமுகமளிக்கவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலந்துகொள்ளாத பட்டதாரிகள் அனைவரும் தாமாகவே இப்பயிற்சி நெறியில் இருந்து விலகிக் கொண்டுள்ளார்கள் என்று கருதப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுகமளிக்காத பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் உதயனுக்குக் கிடைத்துள்ளன. பட்டியலை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ஐ-75)

உலக வங்கியின்

# வீடமைப்புத் திட்டப் பயனாளிகள் தெரிவு பிரதேச செயலர் மட்டத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் டிசெ.2

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்துக்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் வீடமைப்புத் திட்டத்தின் கீழ்தெரிவுசெய்யப்பட வேண்டியவர்களின் விவரங்கள் பட்டியல்படுத்தப்படவுள்ளன.

இதன்படி விதவை. ஊனமுற்றவர் உட்பட 6 பேரைக் கொண்ட குடும்பங்கள் முதன்மைப்படுத்தப்படவுள் ளன.

காணியற்றவர்கள் நீண்டகாலம் ஒரு பிரதேசத்தில் உள்ள காணிகளில் இருந்தமையை உறுதிப்படுத்தியிருந்தால் (அதற்குரித்தான படிவத்தில்) விசேட ஏற்பாட்டின் அடிப்படையில் மிகவறுமையில் உள்ள குடும்பம் தெரிவுசெய்யப்படும்.

மேற்படி தெரிவுகளை மேற்கொள்ள கிராமிய மட்டத்தில் தெரிவுக்குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்கள் பிரதேச செயலருக்கு விளக்கமளிப்பதன் ஊடாக அப்பிரதேசம் அல்லது கிராமம் தெரிவுசெய்யப்பட்டு வீடமைத்துக்கொடுக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. (10-15)

## மேஜர் தேசிகன் ஞாபகார்த்த பஸ்தரிப்பிடம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

நீதியாளர் மேஜர் தேசிகன் ஞாபகார்த்தமாகவும், தமிழீழ மாவீரர்கள் நினைவாகவும் வேலணைத் துறையூரில் அமைக்கப்பட்ட பேருந்துத் தரிப்பிடம் கடந்த வாரம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகத் தலைவர் க.கமலதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை தீவகக் கோட்டச் சிறப்புத் தளபதி ந.கண்ணன், வேலணைப் பிரதேசப் பொறுப்பாளர் யாழ் நம்பி மற்றும் வேலணைப் பிரதேச மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடரரசி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் ஈகச் சுடரினை ஏற்றி வைத்தனர்.

பேருந்து நிலையத்தின் பெயர்ப்பலகையினை ந.கண்ணன் திரை நீக்கம் செய்து வைக்க செம்மணன் பேருந்துக் கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், அம்பிகைபாகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (10-5)

# மின்சாரத்தால் தாக்குண்ட யுவதி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்

கைதடி,டிசெ.2

தொலைக்காட்சி பார்ப்பதற்காக திருட்டுத்தனமாக மின்சாரம் பெறமுயன்ற இளம் யுவதி ஒருவர் மின்சாரத்தால் தாக்குண்டு ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் கைதடி மேற்கில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் தனுஷா (வயது 18) என்பவரே ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

மின்சாரத்தால் தாக்குண்ட இவரைக் காப்பாற்றச் சென்ற இவரது தாயும் மின்சாரம் தாக்கி காயம் அடைந்துள்ளார்.

இதேவேளை, கைதடியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் இவ்வாறு மின்சாரத்தால் தாக்குண்டு கடந்த வாரம் மரணமடைந்தது குறிப்பிடத்தக்கது. (10-75)

# யாழ். மாவட்டத்தில் இதுவரை பெய்தமழை கடந்த ஆண்டை விட அதிகம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரைக்கும் 1489.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலியில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த மழை வீழ்ச்சிப் பதிவானது கடந்த ஆண்டு முழுவதும் யாழ்.மாவட்டத்தில் பதிவாகிய மழை வீழ்ச்சியைக் காட்டிலும் 160.9 மில்லி மீற்றர் அதிகமாகும்.

இந்த ஆண்டில் இதுவரைக்கும் அதிகூடிய மழை வீழ்ச்சியினைப் பெற்ற நாளாக நவம்பர் மாதம் 22ஆம் திகதி 98.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை, இம்மாத இறுதிக்குள் இன்னும் அதிகூடிய மழை வீழ்ச்சி கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (10-13)

## மாதாந்த மருத்துவசேவை

யாழ்ப்பாணம்,டிசெ.2

வடக்கு - கிழக்கு புற்றுநோயாளர் உதவி மையத்தின் மாதாந்த இலவச மருத்துவ சேவை இன்று காலை 9 மணி தொடக்கம் இல. 69, பழம் றோட், கந்தர் மடம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது. இம்மருத்துவ முகாமில் பெண்கள் மட்டும் கலந்துகொள்ளலாம்.

இரு பாலாருக்குமான வாய்ப்புற்று நோய் மருத்துவமுகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை மணி 9 தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மேற்படி முகவரியில் நடைபெறவுள்ளது. (10-202)

## உதயவாக்கு

உழைத்துக் களைத்தவனின் வியர்வை ஆறமுன்பு அவனின் ஊதியத்தைக் கொடு.

## நாளை

*கார்த்திகை 18*
*வெள்ளிக்கிழமை*
*(03.12.2004)*
*திதி: ஷஷ்டி*
*பிற்பகல் 12.56*
*நட்சத்திரம்: ஆயிலியம்*
*பிற்பகல் 02.12*
*சுபநேரம்: 06.15 - 07.45*
*ராகுகாலம்: 10.45 - 12.15*
*(பழையநேரப்படி)*

## சாயி சிந்தனை

### மனதின் மாயத் தோற்றம்



ஒவ்வொருவரும் மனதை ஒரு மாயத்தோற்றம் என்றே கருத வேண்டும். இது வெகுவிரைவில் மாறிவிடும் தன்மை கொண்டது. காலத்திற்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப பலவித மாற்றங்களைக் கொள்ளவல்லது. இது புலன்களை இச்சைப்படி செயற்படச்செய்யும் வல்லமை பெற்றது. இலாப, நஷ்டங்களையும் சுகதுக்கங்களையும் இன்ப துன்பங்களையும் நிந்தனைகளையும் போற்றுதல்களையும் அனுபவிப்பது மனதேயன்றி ஆத்மாவல்ல. இவையெல்லாம் மனதின் கற்பனையே. இந்த மனதின் தத்துவத்தை நன்குபுரிந்துகொண்டுவிட்டால் ஆத்மாவை உணர்வது எளிதாகும். எல்லாப் பொருள்களும் ஆத்மாவே என்னும் அத்வைத உணர்வு பெறவேண்டும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஓடுகள், தீராந்திகள், கதவுகள், நிலைகள், பனைமரங்கள் என்பன மலிவுவிலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.92, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(39139)

## பழைய பேப்பர் விற்பனைக்கு

பழைய பேப்பர்கள் உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: T.P.077 3039454. (39153)

## அமெரிக்க விசா

55,000 அமெரிக்க விசா (Green Card) லொத்தர் விண்ணப்பிக்க Internet மூலம் அமெரிக்காவுக்கு அனுப்ப யாரும் விண்ணப் பிக்கலாம். விரையுங்கள், தாமதிக்காதீர்கள். தொடர்பு:Penguin, B2/F23, Bloomendhal Flats, Colombo-13. T.P.No: 243 8367, 077 3081764. (சி-39378)

## தவறிவிட்டது

உடுவில் வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த த.சிவராஜா என்பவருடைய முக்கிய ஆவணங் கள் உரும்பிராய்ச்சந்திக்கும் மருதனார்மடம் K.K.S. வீதிச் சந்திக்கும் இடையில் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் சொ.சண்முகலிங் கம், சட்டத்தரணி, உரும்பிராய் வீதி, மருத னார்மடம் என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும்.

(39159)

## கோழிக்குஞ்சு விநியோகம்


தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 04-12-2004 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக் கோட்டைச் சந்தி, T.P.:No, 222 3529, 222 2867, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம், சண்டிலிப்பாய்ச் சந்தி. (39169)

---

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### விசுவலிங்கம் இராசதுரை

அன்னை மடியில் 06-10-1923 — ஆண்டவன்அடியில் 15-11-2004

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து ஆதரவு காட்டினீர் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்தே சென்றுவிட்டீர்! இன்று ஆத்மா சாந்தி அடைய ஸ்ரீ காமாஷி அம்பாளை வேண்டுகின்றோம்!

அமரராகிவிட்ட எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்தியம் இன்று (02.12.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் நிகழ்கின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

557/3, கே.கே.எஸ்.றோட்,
மதவடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (39160)(34-14-15)

-இ. மனோகரன் (மகன்).

---





அதிநவீன புத்தம் புதிய கணினிகள்
Visit our showrooms for best pricing
ரூ 39,000 /= தொடக்கம்
AMD/Intel P4 Computers
Also Avilable All Computer accessories
Warranty 3 Years Warranty

PC REPAIRS UPGRADES
Call your nearest branch for Mobile Service

தற்பொழுது நவீன காட்சியறையுடன் வவுனியாவில் மைக்ரோ பிசி சிஸ்ரம்ஸ்
Open on Sundays & Poya days 9am to 1pm.
சிறப்பு சலுகைகள் அறிமுக விலைகளுடன்

MICRO PC SYSTEMS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 2225893, 071 2374181 |
| நெல்லியடி | பிரதான வீதி நெல்லியடி, (பொலிஸ் நிலையமருகில்) தொ.பே.: 077 3039536 |
| கிளிநொச்சி | கணனி மையம், யாழ் சாலை,(கந்தசாமி கோவிலுக்கு அருகில்) கிளிநொச்சி. |
| வவுனியா | 73C, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. தொ.பே.: 024 4588339, 0777308417 |
| வெள்ளவத்தை | 15, 36வது ஒழுங்கை கொழும்பு–06 தொ.பே.: 011–4513235,011–4516764 |
| கொட்டாஞ்சேனை | 82, புதுச் செட்டித் தெரு, கொழும்பு–13 தொ.பே.: 011–4613617, 011–4619673 |

CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo-06. Tel: 0114 510686


---

## தீவுப்பகுதி தெற்கு (வேலணை) பிரதேசசபை, வேலணை

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

தீவுப்பகுதி தெற்கு (வேலணை) பிரதேச சபையின் செயலாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 2004.12.03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்ததொகையைச் செலுத்திக் கேள்விப் பத்திரங்களை வேலணை பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்வப் பத்திரங்களில் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு, அரக்குமுத்திரை வைத்து செயலாளர், தீவுப் பகுதி தெற்கு (வேலணை) பிரதேசசபை என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இட்டு, 2004.12.06 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கிடையில் கிடைக்கச்செய்தல் ஒப்பந்தகாரரின் கடமை ஆகும்.
3. கேள்விகள் 2004.12.06 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் மாத்திரம் சமுகமளிக்கலாம்.
4. மேலதிக விவரங்களைத் தீவுப் பகுதித் தெற்கு (வேலணை) பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ. இல. | வேலையின் விவரம் | நிதி மூலம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) (வற் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்மன் கோயில் ச.ச.நி. முன்பள்ளிக்கு தளபாடம் வழங்குதல் | DCB | --------- | --------- |
| 02 | 20 சனசமூக நிலையங்களுக்கு புத்தகங்கள் வழங்குதல் | DCB | --------- | --------- |
| 03 | நயினாதீவு பிரதான வீதிக்கு தாரிடல் | DCB | --------- | --------- |
| 04 | புங்குடுதீவு கிராமத்திற்கு பிளாஸ்ரிக் தொட்டிகள் வைத்துக்கட்டி வழங்குதல் | DCB | --------- | --------- |
| 05 | சரவணை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு சூரிய மின்கலம் வழங்கிப் பொருத்துதல் | DCB | --------- | --------- |
| 06 | தீவுகளுக்கான குடிநீர் விநியோகம் | DCB | --------- | --------- |
| 07 | நயினாதீவு அம்பிகை ச.ச. நிலைய நூலகத்திற்கு தளபாடங்களும், புத்தகங்களும் வழங்குதல் | DCB | --------- | --------- |
| 08 | வேலணை அம்பிகை நகர் முன்பள்ளி தளபாடங்கள் வழங்குதல் | DCB | --------- | --------- |
| 09 | புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தெய்வக்குழந்தைகள் இல்ல அகதி மாணவர்களுக்கு புத்தகங்கள், பயிற்சிக்கொப்பிகள், கோல உடைகள் வழங்குதல் | DCB | --------- | --------- |
| 10 | தீவுகளுக்கான குடிநீர் வழங்குவதற்கு வேண்டிய அபிவிருத்தி வேலைகள் | DCB | --------- | --------- |
| 11 | புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் ஆலடியில் புதிய கிணறு நிர்மாணித்தல் | DCB | --------- | --------- |
| 12 | மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு புத்தகங்களும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கல் | DCB | --------- | --------- |
| 13 | மண்டைதீவு மத்திய மகா வித்தியாலயத்திற்கு மலசலகூடம் திருத்தி அமைத்தல் | DCB | --------- | --------- |
| 14 | மண்டைதீவு நடமாடும் வைத்தியசேவையிற்கான AUTO (முச்சக்கர உருளி) வழங்குதல் | DCB | --------- | --------- |
| 15 | சுருவில் கிராமத்திற்கு தண்ணீர் விநியோகிக்க அம்பிகை நகரிலிருந்து சுருவில் சந்தி வரை நீர்விநியோக குழாய் இணைத்து வழங்குதல் | DCB | --------- | --------- |
| 16 | செட்டிபுலம் சந்தைக்கு கட்டடப்பொருள்கள் வழங்குதல் | DCB | --------- | --------- |
| 17 | அம்பிகை நகர் ச.ச. நிலையம் புனரமைப்பு. வேலணை | DCB | 500.00 | 230.00 |
| 18 | மணிபல்லவன் ச.ச. நிலையம் புனரமைப்பு | DCB | 250.00 | 230.00 |
| 19 | திருவள்ளுவர் ச.ச. நிலையம் புனரமைப்பு | DCB | 250.00 | 230.00 |
| 20 | பாரதி விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல். புங்குடுதீவு | DCB | --------- | --------- |
| 21 | அம்பிகை நகர் முன்பள்ளிப் புனரமைப்பு | DCB | 600.00 | 230.00 |
| 22 | புங்குடுதீவு சர்வதேசக் கிராம அபிவிருத்திச் சங்க அபிவிருத்தி வேலை | DCB | --------- | --------- |
| 23 | பாரதி ச.ச. நிலையம் புனரமைப்பு. வேலணை | DCB | 2000.00 | 345.00 |
| 24 | தென்னிந்திய திருச்சபை முன்பள்ளிக் கட்டடம் அமைத்தல். புங்குடுதீவு | DCB | --------- | --------- |
| 25 | நயினாதீவு 8 ஆம் வட்டாரம் மகளிர் சங்கத்திற்கு தளபாடம் வழங்கல் | DCB | --------- | --------- |
| 26 | வேலணை முத்துமாரியம்மன் கோயில் புனரமைப்பு | DCB | --------- | --------- |
| 27 | மண்டைதீவு நோயாளர் சேவைக்கான ஆட்டோ (முச்சக்கர உருளி) வழங்கல் | DCB | --------- | --------- |
| 28 | நயினாதீவு மத்திய ச.ச. நிலையத்திற்கு விளையாட்டு உபகரணம் வழங்கல் | DCB | --------- | --------- |
| 29 | புங்குடுதீவு பாரதி ச.ச. நிலையத்திற்கு புத்தகங்கள் வழங்கல் | DCB | --------- | --------- |
| 30 | துறையூர் ஐயனார் ச.ச. நிலையத்திற்கு தளபாடம் வழங்கல் | DCB | --------- | --------- |
| 31 | அம்பிகை நகர் ச.ச. நிலையத்திற்கு கட்டடப்பொருள்கள் கல்விசார் உபகரணங்களும் வழங்கல் | DCB | --------- | --------- |
| 32 | நாவலர் வீதி புனரமைப்பு. வேலணை | DRRS | 5000.00 | 575.00 |
| 33 | கந்தன் கடவை வீதி புனரமைப்பு. வேலணை | *** | 6250.00 | 690.00 |

*** Maganeguma

குறிப்பு:

1. தொடரிலக்கம் 1,7,8,25,30 ஆகியவற்றிற்கான தளபாடங்கள் பிரதேசசபையினால் கொள்வனவு செய்து வழங்கப்படும். குறித்த நிறுவனங்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
2. தொடரிலக்கம் 2,7,9,12,31,20 இதற்கான புத்தகங்கள் கொள்வனவுசெய்து வழங்கப்படும். கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கவிரும்புவோர் சமர்ப்பிக்கவும். உரிய நிறுவனங்கள் எம்முடன்தொடர்புகொள்ளவும்.
3. தொடரிலக்கம் 20,12,28 விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுசெய்து வழங்கப்படும். உரிய நிறுவனங்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
4. தொடரிலக்கம் 5, சூரிய மின்கலத் தொகுதியை வழங்கிப் பொருத்துவோர் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கவும்.
5. ஆர்ப்பிக்கோ பிளாஸ்ரிக் கொள்கலன் 1000 லீற்றர் ஆறு கொள்கலனுக்குரிய கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும்.

செல்லப்பா சண்முகராஜா (ஜே.பி.)
செயலாளர், வேலணை பிரதேசசபை.

(சி-39413)(34-14-15)




# பெண் விடுதலையின் எதிரி ஆண் அல்ல......

இன்றைய பெண் எவ்வளவு முன்னேறிவிட்டாள், சாதனைகள் பல படைத்து புகழ்களும் பாராட்டுதல்களும் பெற்றுக்கொள்கிறாள்.

ஆற்றலும் ஆளுமை அறிவும்மிக்க பெண்கள, சமூகப் போலித் திரைகளைக் கிழித்து வெளிவந்து தங்களாலும் செயற்படமுடியுமென்று நிருபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்ணின் கல்வி வளர்ச்சியும், பெண் அமைப்புகளின் விழிப்புணர்வும் இவற்றையெல்லாம் சாத்தியமாக்கியிருக்கின்றன.

பெண்விடுதலை தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட ஆரம்பித்த பின்னர் இதுவரை காலமும் குடும்பம், வீடு, சமூகம் என்ற வரையறைக்குள் வாழந்து பழகிவிட்ட பெண்கள், இவற்றையெலலாம் தாண்டி, வெளிவந்து வெற்றி நடைபோடுகின்ற போதும், பெண்களுக்குரிய சகல உரிமைகளும் சம அந்தஸ்தும் கிடைத்துவிட்டதா என்றால் 'இல்லை' என்பதே உண்மை.

## ஆணும் பெண்ணும் புரிதலுடன் செயற்படும்போதே பெண் உரிமை என்பது சாத்தியமாகும்

எத்தகைய வளர்ச்சியில் முன்னேறிக் கொணடிருந்தாலும், பெண்களின் சுய ஆளுமை செயறபாடுகள் குடும்பத்தில் அவளது நிலை, அவர் பற்றிய சமூகத்தின் பார்வை, அனைத்திலுமே ஆணுககு அடுத்தபடியான ஒரு நிலையையே இன்றும் கொடுக்கிறார்கள் எம்மவர்கள்.

இதனை, யாவரும் உணர்ந்துள்ளார்கள். இதற்கு காரணம் என்ன? தவறு எங்கே? என்று சிந்தித்தால் ஏற்றுக்கொள்ள முடியாத மனங்களே காரணம் என்பதைத் தெட்டத்தெளிவாக உணரமுடியும்.

எவவளவு தூரம் முன்னேறினாலும், பாராட்டுதலுக்குப் பதில், நையாண்டி விமர்சனங்களே அவள் மனதை நோகடிப்பதைக் காணலாம். அடஙகாப்பிடாரி, ஆண்மூச்சுப் பிடித்தவள் என்று விமர்சிக்கப்படுகிறார்கள். எவ்வளவுதான் தன்னம்பிக்கையுடன் முன்னேறிய பெண்ணின் மனதிலும் இதன் வலிகள் ரணமாய் இருப்பதைக் காணலாம்.

பெண் என்கிற காரணத்திற்காக நெருக்குதல்களுக்குள்ளாகி மனஉளைச்சலுக்குள்ளாகின்றார்கள்.

மனித ஆளுமை என்பது பால் வேறுபாட்டிற்கு அப்பாற்பட்டது. எந்தவொரு நோக்கிலும் ஆண், பெண் என்று பாரபட்சம் காட்டி வெறுக்காத மானுட நேயம் வளர்க்கப்படவேண்டும். இதன் மூலம் தான் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

சில பொதுஅமைப்புகளிலும், வேலைத் திட்டங்களிலும், இன்னும் கூட பாகுபாடு காட்டப்படுகிறது. இவ்வேலைத்திட்டங்கள் ஆண்களுக்கு ஈடானதாக இல்லை. இவ்வேலைத் திட்டங்கள் பெண் விடுதலைக்குரியனவாக அமைந்தபோதும், அதில் பெண்களின் நாட்டம் குறைவாகக் `காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இதற்கு மரபு ரீதியாக பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பண்புகளை, மரபுகளை விட்டு வெளிவருவது தவறு என்கிற தப்பான கண்ணோட்டமும் ஒரு காரணமாகும்.

இவ்வாறு இந்நிலை தொடருமானால், பெண் உரிமையும் இறைமையும் ஏற்றுக் கொளளப்படாது பெண் சமத்துவம் என்பது சாத்தியமற்றதொன்றாகிவிடும். ஒரு சமூகம் விடிவுபெற சமூகத்தின் அங்கத்தவர் யாவரும் விழிபபுணர்வு பெறுதல் அவசியம். மற்றையது பெணவிடுதலை ஆர்வலர்களின் அவசரப் போக்கும் கடும் எதிர்ப்புணர்வும் கூட சில எதிர்விளைவுகளைத் தோற்றுவித்துவிடக்கூடும்.

பெண் விடுதலையின் எதிரி ஆண் அல்ல. எதிரியாக ஆண்களை நினைத்து, குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகிவிடும்.

எனவே, ஆணும் பெண்ணும் இணைந்து கைகோர்த்து, புரிந்துகொண்டு செயற்படுவதன் மூலமே தடைகளைத் தகர்த்தெறிய முடியும்.

- மதியழகி.

---

## எங்கே புதைத்தாய்?

மெல்லச்சிரித்து நக்கலாய்
பிறமுதுகில்சொல் விரித்து
இருந்து ~ எழுந்து
நாட்டிய நயனம் செய்து
உதட்டில் சாயம் பூசி
ஒப்பனையாய் கூந்தலதை
சடையெனவே பறக்கவிட்டு
மேலாடைதனை இறுகத் தைச்சு
இடுப்பிலே
கைக்குட்டையால் துண்டு கட்டி
அதிலே கூட வெட்டுப்போட்டு
ஓடி ஒருக்களித்து
பின்னழகை எடுத்துக்காட்டி
நிலமதிர நடை நடக்க
மேனியிலே குலுங்கி நிற்க
நாவினிலே 'தமிங்கிலீசு'
தடல் புரளாய்
வெளியே வீசும்
நவநாகரீக நங்கையே
தமிழர் பண்பாட்டை
எங்கே புதைத்தாய்....?

ஆ.சூரியன்.

---

## சந்தியாவின் கடிதங்கள்



*பிரியமுள்ள பிரியாவிற்கு,*

சென்ற கடிதத்தில் சுயதொழில் தொடங்குவதற்கு வேண்டிய ஆலோசனைகளை எழுதியிருந்தேன். இன்று 'உறவு' பற்றி எழுதுகின்றேன்.

நமது அன்றாட வாழ்க்கை பெரும் நெருக்கடிகளுக:கு மத்தியிலே வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கின்றது. எழுத்தாளர்கள் சொல்வதுபோல வாழ்க்கை என்னும் ஆற்று வெள்ளததில் நாம் சிறுதுரும்பாக அடித்துச் செல்லப்படுகின்றோம். இந்த ஆற்று வெள்ளத்தில் எதிர்நீச்சல் போட்டு முன்னேறுவதற்கு நமக்கு பற்றுறுதியாக இருக்க வேண்டியது இந்த உறவுகளே.

நாம் ஏதிர்பார்க்கும் வகையில் மற்றவரை உருவாக்க முயல்வது உறவல்ல. இது பிறரது தனித்தன்மையை மதிப்பதிலும். பரஸ்பர உதவியிலும் தங்கியுள்ளது.

ஏற்றத்தாழ்வில் வாழும் உறவுகள் அதன் தொடர்பு அறுந்துபோகும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. சில வீடுகளில் பார்ப்போமானால் மனைவி என்பவள் 24 மணிநேரமும் வேலைகளைச் செய்து கொண்டிருக்கவேண்டும் என் று கணவன்மார்கள் எண்ணுவதைக் காணலாம். இதனையே தலைகீழாகப் பார்த்தால் கணவன் என்றால் எப்படியாவது பணம் சம்பாதித்துக் கொண்டுவந்தால் போதும் என்ற எண்ணத்தோடு வாழ்வதையும் காணலாம்.

கணவன் - மனைவி உறவென்பது நல்ல நட்பு. நல்ல தாம்பத்தியம் என்று வக்கணையாகப் பேசுவது மட்டுமல்ல உறவு. உறவுகளின் பலன்களைப் பெறும் நாம் அந்த உறவு சமநிலையில் இயங்குகின்றதா? அல்லது நம் சௌகரியத்துக்கு அந்த உறவைப் பயன்படுத்துகின்றோமா என்று சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

இரண்டு பேர் முதலிட்டு ஒரு தொழிலை ஆரம்பிக்கின்றார்கள். நாளடைவில் ஒருவர் மட்டும் அந்தத் தொழிலில் முழுமையாக ஈடுபட்டு மற்றவர் விலகி நிற்கும் போது அந்தத் தொழிலில் பாகப்பிரிவினை ஏற்படும். அல்லது நஷ்டத்திலேயே செல்லும். இது போலவே உறவுகளும். சமநிலையில் உறவுகள் இயங்காதபோது ஆண்டான் - அடிமை உறவாக மாறி பிளவையே சந்திக்கும்.

மகாகவி பாரதி வறுமையில் வாடுவதை அறிந்த ஒரு பணக்காரர் அவருக்குப் பணம் அளிக்க முன்வருகிறார். பாரதி அந்தப் பணத்தைப் பெறும்போது 'நண்பரே பணத்தை நீங்கள் உங்கள் கையில் வைத்திருங்கள் நான் அதை எடுக்கின்றேன்' என்றார் பாரதியார். மற்றவரிடம் பெறும்போதும் தன்மானத்தை விட்டுக்கொடுக்காத நிலையிலேயே பெறுகின்றார். இதுவே உறவுகளிடம் இருக்க வேண்டியது. உறவுகள் தன்மானத்துடனேயே நிலைநிறுத்தப்படவேண்டும்.

நமது வாழ்வு என்றும் தனித்து வாழ முடியாதது. நாம் ஒருவரையொருவர் சார்ந்தே வாழவேண்டும்.

இந்த உறவின் இன்னுமொரு தாற்பரியம் வயது வேறுபாட்டை உணர்ந்து மரியாதை கொடுத்து வாழுதல்.

நமக்குக் கீழ் வேலை செய்பவராயினும் வயது அதிகமானவர்களிடம் நாம் மரியாதை கொடுத்துப் பழக வேண்டும். இந்த வயது முதிர்ந்தவர்கள் அனுபவ ரீதியாக நமக்குப் பலவழிகளில் உதவக்கூடும்.

எனவே பிரியா நாமும் நமது நட்பென்னும் உறவைப் பலப்படுத்துவதற்கு ஒருவரையொருவர் சார்ந்தும் மதித்தும் செயற்படுவோம் என்று விடை பெறுகின்றேன்.

02.12.2004

பிரியமுடன் சந்தியா.

---

# பலவீனங்களை வெளிக்கொணர்வதால் நாம் தோற்கடிக்கப்படுகின்றோம்

எமது பலவீனங்கள் தான் நாம் மற்றவர்களிடையே தோற்றுப்போவதற்குக் காரணமாக இருக்கின்றது. எந்தச் சந்தர்ப்பங்களிலும் எமது பலவீனங்களினை வெளிக்காட்டக்கூடாது. அதனைக் கண்டுகொண்டவர்கள் அதைவைத்தே எம்மைத் தகர்த்தெறிந்து விடுவார்கள். ஆசைகள், பொறாமைகள், விருப்புவெறுப்புகள் போன்றன எமது பலவீனங்களாகக் காணப்படுகின்றன. இவற்றை மற்றையவர்களுக்குக் கூறுவதனால் என்ன நிகழப்போகின்றது?

தன் பலவீனங்களை மறைத்துக் காக்கத் தெரியாதவனால் தான் நினைத்த காரியத்தை ஒருநாளும் சாதிக்கமுடியாது. ஆனால், எம்முடைய பலவீனங்களினைப் பயன்படுத்தி மற்றவர்கள் காரியங்களினைச் சாதித்துவிடுவார்கள். நமது பலவீனங்களினைப் பயன்படுத்தி அவர்கள் நம்மைத் தோற்கடித்துவிடுவார்கள். இதனைக் கவனத்திற் கொண்டாவது நமது பலவீனங்களை வெளியே காட்டாது இருக்கவேண்டும்.



பலவீனங்களில் பல வகை உண்டு. அளவுக்குமிஞ்சி செலவு செய்தல், குடிப் பழக்கம், ஒருவர் மீது அளவுக்கு மிஞ்சிய அன்பு வைத்தல், அத்தகைய அன்பினூடாக எதையுமே செய்யத் துணிதல், செய்யாத பிழை ஒனறைக் கண்டு பயப்படுதல், வீண் செலவுகள் செய்தல், மற்றவர்களிற்காகக் கவலையடைதல் போன்றன சுட்டிக்காட்டக்கூடியன.

ஒருவரிடம் நாம் உண்மையான அன்பையோ, பாசத்தையோ வைத்துப் பழகும்போது அவர்கள் அந்த அன்பையே தப்பாக எடைபோட்டு, அதை வைத்தே எம்மிடமிருந்து பல காரியங்களினைச் சாதித்துவிட முற்படுகின்றனர்.

இதனை உணர்ந்துகொண்டு நாம் கவலை அடையும்போது அதற்கும் ஒரு காரணம் கூறி அதனையும் தமக்குரியதாக பயன்படுத்தி விடுகின்றனர். நாம் யாரின் மீதாவது அளவுகடந்த அன்பு கொண்டுள்ளோமேயானால் அதனை வெளிக்காட்டாமல் இருப்பதே எமக்கு நல்லது.

இநதப் போட்டிகள், பொறாமைகள் நிறைநத உலகத்திலே எம்மிடமுள்ள பலவீனங்களினை நாம வெளிக்காட்டுவோமேயானால் நிச்சயம் சமூகத்தினரால் தோற்கடிக்கப்படுவோம். இதில் நம் பகைவர்கள் தான் நம்முடன் போட்டி போடுகிறார்கள் என்று நினைக்கக்கூடாது. அவர்கள் எம்மைப் பற்றிச் சிந்திக்கவே மாட்டார்கள். ஆனால, நம் நண்பர்கள், உறவினர்களுடனேயே போட்டியிடும் சந்தர்ப்பங்கள் எத்தனையோ வந்துவிடுகின்றன. சற்று நினைவுகூர்ந்து பாருங்களேன்.

வெளியே உள்ள உறவுகளினைச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. நம் குடும்பத்திலேயே எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். நாம் எமது விருப்பப்படி எல்லா விடயங்களும் நடைபெற வேண்டும் என விரும்புகின்றோம். ஆனால், அவர்களோ இவர் சொல்வதை என்ன கேட்பது, நமது விருப்பப்படி செய்து முடிப்போம் என்று திட்டம் தீட்டுகின்றனர். ஏன் கணவன், மனைவியினரைக் கூட எடுத்துப்பாருங்கள். அவாகள் உடலும் உயிரும் போல வாழ்வாாகள். ஆனால், அவாகளிடையே கூட விட்டுக்கொடுப்பு புரிந்துணர்வு, உணர்ந்து கொள்ளும் தன்மை என்பன இல்லாது போய்விடுகின்றன. இவர் என்ன கூறுவது என்று மனைவியும் இவள் என்ன பெரிய ஆளா எனக் கணவனும் நினைத்துக்கொண்டு இருககிறார்கள். இதுகூட அவர்களிடையே காணபடுகின்ற ஒரு பெரிய பலவீனமாகத்தான் இருக்கின்றது.

இப்படியான பலவீனங்களினை பயன்படுத்திக் கூட கணவன், மனைவியிடையே பிரச்சினையைத் தூண்டி விட எவரும தயங்க மாட்டார்கள். இப்படியான அறப பலவீனங்களினால் தான் நாம் நண்பர்களிடம் மட்டுமல்லாது பெற்றோர், உற்றார், உறவினர்கள் ஏன் காதலன், காதலியிடம் கூடத் தோற்றுப் போய்விடுகின்றோம்.

இப்படியாக நூற்றுக்கு மேற்பட்ட பலவீனங்கள் எம்மைப் பற்றிக் கொண்டிருக்கின்றன. இவற்றைப் போக்கிக்கொள்ள முயலவேண்டியது எமது கடமை. ஆனால், அது எவராலும் முடியாத ஒரு காரியமாகவே இருந்து வருகின்றது. இவற்றைப் போக்க முடியாவிட்டாலும் பிறர் கண்டுபிடித்துவிடாதபடி பாதுகாக்க வேண்டும்.

- கங்கா.

---

## நவக்கிரகங்களின் மனைவிமார்

நவக்கிரகங்களாவன சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது. இவர்களுக்கு மனைவிகள் உள்ளனர், அவர்களைப்பற்றி உங்களுத் தெரியுமா?

சூரியன் - உஷா, சந்திரன் - ரோகினி, அங்காரகன் - சக்தி தேவி, புதன் - ஞான தேவி, குரு - தாராதேவி, சுக்கிரன் - சுகீர்த்தி, சனி - நீலா, ராகு - சிம்ஹி, கேது - சந்திரலேகி.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

02 - 12 - 2004

யாழ்ப்பாணம்,
அத்தியடியைச் சேர்ந்த
அம்பிகைபாகன் - நாகநந்தினி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
செல்வன்

## திவானுகன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று [02.12.2004] வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலத்துடன் கொண்டாடுகின்றார்.

செல்வன் திவானுகனை அன்பு அப்பா, அம்மா அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மப்பா, மாமாமார், அத்தைமார் ஆகியோர் அத்தியடி சிதம்பர நடராஜப் பிள்ளையார் அருள்பெற்று சீரோடுஞ் சிறப்போடும் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

4. அம்பலவாணர் வீதி,
அத்தியடி.

தகவல்:
அப்பா, அம்மா.

(39072) (24-19-17)

# அனலைதீவு தபால் சேவை வழமைக்கு

நல்லூர்,டிசெ.2

அனலைதீவு தபால் சேவை கடந்த 13 ஆண்டுகளின் பின் மீண்டும் இந்த மாதம் முதல் வழமைக்குத் திரும்புகிறது.

இதன்படி யாழ்ப்பாணத்திலிருந்து அனலைதீவுக்குக் காலை 9.30 மணிக்கும், பிற்பகல் 2 மணிக்கு அனலைதீவிலிருந்தும் பிற்பகல் 3 மணிக்கு எழுவைதீவிலிருந்தும் தபால்கள் யாழ். நகருக்கும் அனுப்பிவைக்கப்படும். (8-111)

# அரச அதிபரும் குழுவினரும் அனலைதீவுக்கு விஜயம்

நல்லூர்,டிசெ.2

யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையிலான குழு ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை அனலைதீவுக்குத் திடீர் விஜயத்தை மேற்கொண்டது.

இக்குழுவினர், அங்கு உலக வங்கியின் உதவியுடன் அமைக்கப்படும் வீடுகளைப் பார்வையிட்டனர். (8-111)

# கண்ணீர் அஞ்சலி

எமது மாணவி
செல்வி **சிவாஜினி அமிர்தலிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இந்துமன்றம்,**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.**

(சி-39410) (24-19-46)


# ஷென்மென் அக்குபங்சர் சிகிச்சை நிலையம்

சகல விதமான ரோகங்களுக்கும்
பக்கவிளைவுகளற்ற வைத்திய சிகிச்சை வழங்கும்
ஒரே நிறுவனம் இது. உடல் பருமன் குறைத்தல்,
சத்திர சிகிச்சையின்றி
கண் குறபாடுகளைத் தீர்க்க
விசேட காந்த, லேசர் சிகிச்சைகளும் வழங்கப்படும்.

தொடர்பு:

## கஜன் வீடியோ

தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. (24-19-46)

(39148)


# முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி
## சாந்தினி ஆனந்தராசா B.A.Dip.

(ஆசிரியை, இளவாலை மெய்கண்டான் ம.வி.)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 20-01-1964 | 13-12-2003 |

திதி: 02.12.2004 (கார்த்திகை) அபரபக்கச் சஷ்டி

எம்முயிர்த் துணையே எங்கள் தலைவி
உன்னை இழந்து ஓடியது ஓராண்டு
உன்னையே நினைந்து ஒவ்வொரு கணமும்
வடிக்கும் கண்ணீர் வற்றவே இல்லை!
அம்மா எப்போ வருவா என்றுன்
பிஞ்சுகள் கேட்டுத் தவிக்குதே இங்கு!
எங்கள் செல்வமே எங்கள் ஒளி விளக்கே!
இருண்ட வாழ்வில் துவண்டு வருந்திடும்
எங்களுக்குனது ஆசியைத் தருவாய்!
அமைதி பெறுவாய் ஆண்டவன் துணையே!

மயிலங்கூடல்
இளவாலை.

கணவர், பிள்ளைகள்,
சகோதரர், சுற்றத்தார்.

(39126) (24-19-15)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
19 - 09 - 1929



விண்ணில்
02 - 11 - 2004

## அமரர் குமாரசாமி அருளானந்தம்

(ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர்)

திங்கள் ஒன்று சென்றாலும்
தங்கள் முகம் மறையவில்லை
எங்கள் உயிர் உள்ளவரை
ஏந்தலே உன் நினைவழியாது

இன்று (02.12.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

61/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(39155)(42-19-46-24)


Journalism Awards 2004



இலங்கை பத்திரிகை
ஆசிரியர்கள் சங்கம் (TEGOSL)
இலங்கை பத்திரிகை
ஸ்தாபனத்துடன் (SLPI)
இணைந்து ஒழுங்குபடுத்தும்
திறமையாளர்கள் 2004

விண்ணப்ப விதிமுறைகளை
ஜனவரி 1 ஆம் திகதி முதல்
பத்திரிகைகளில் எதிர்பாருங்கள்.

விருது வழங்கும் இரவு ஜூன் 2005

EXCELLENCE IN JOURNALISM AWARDS 2004

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

TEGOSL

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முற்போக்குச் சிந்தனை அவசியம்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி



சாவகச்சேரி,டிசெ.2

எமது சமூகம் மூட நம்பிக்கைக்குள்ளும் பழைமை வாதத்திற்குள்ளும் இருக்கின்ற நிலையில் அதிலிருந்து அரும்புகளாக விரியும் மொட்டுக்களாக இருக்கும் எம் குழந்தைகள் முற்போக்காளர்களாகச் சமூகத்தில் தோன்றவேண்டும். இதற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் விடாமுயற்சியுள்ளவர்களாக இருப்பது மட்டுமல்ல, முற்போக்குச் சிந்தனை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற 'விரியும் மொட்டுக்கள்' என்ற சிறுவர்களுக்கான புதிய, பழைய பாடல் நூல் மற்றும இறுவட்டு ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு நிகழ்விலும் கலந்துகொண்டு வெளியிட்டு உரை நிகழ்த்தும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிறீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் உரை நிகழ்த்தும்போது, குழந்தைகளது வாழ்நாளில் அடித்தளமாக அமைவது வீட்டுச் சூழல். இந்த வீட்டுச் சூழல் எப்பொழுதும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. அது பல்வேறுபட்டதாக இருக்கும். முன்பள்ளி என்பது ஒரு பொதுவான சூழலைக் கொண்டிருக்கும். அந்தச் சூழல்தான் அவர்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றது.

இந்நூலில் ஆக்கபூர்வமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. சூழல் பற்றித் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. தன் சமூகம் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது.

எப்பொழுதும் உயிரிலும் மேலாக மதிக்கப்படுவது அவர் சார்ந்துள்ள தேசியம், இவரது எண்ணத்தில் தன் உள்ளத்தில் ஆணித்தரமாகத் தேசியத்தை மதிப்பதனால்தான் இந்நூலில் எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரனைப் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளர்.

நாம் விரும்புவது சுதந்திரமான மகிழ்ச்சிகரமான சூழலையே. இதனை அடைவதற்கு நாம் அல்லும் பகலும் உழைக்கின்றோம்.

இவ்வாறு வாழ்வதற்கான போராட்டத்தை நடத்தும் இந்த இனத்தினது தேசியத்தின் மக்களின் மத்தியில் இந்நூலின் வருகை என்பது மிகவும் முக்கியமான காலத்தின் தேவையாகும்.

எமது தலைவர் மேதகு பிரபாகரன் பல துறைகளிலும் விற்பன்னராகத் திகழ்கிறார். உலகிலே அரசியல் இராணுவ இராஜதந்திர ரீதியிலான தலைசிறந்த தலைமைத்துவத்தைக் கொண்டுள்ளார்.

பல்துறை நோக்கம் கொண்ட நிபுணத்துவ சிறபபுத் தன்மையையும் கொண்டவராகத் தேசியத் தலைவர் மதிக்கப்படுகிறார். அவ்வாறான பெருமையைக் கொண்டவர்கள் நாம் -

அரசியல் என்கின்றபொழுது - அரசியல் ஒரு மனிதனை நிர்ணயிக்கின்றது. எனவே, அரசியலைவிட்டு ஒதுங்கிப்போகாமல் இருக்க வேண்டும்.

இன்று நாம் அரசியல் உரிமைக்காகப் போராடுகின்றோம். அரசியல் உரிமையை எமது மண்ணில் நிறுவும்போதுதான் ஒளிமயமான எதிர்காலம் இருக்கும். இந்த அரசியல் இறையாண்மையை இந்த மண்ணில் நிறுவாதவரை எங்கள் எதிர்காலம் ஒளிமயமாக முடியாது.

இவ்வுலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவருக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. எங்களுக்கும் சுயநிர்ணயம் இருக்கிறது. இது ஐக்கிய நாடுகள் சபைச் சாசன விதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது வாழும் மனிதன் ஒவ்வொருவருக்கும் உண்டு. இது பிறப்பால் வந்த உரிமை. அந்த அடிப்படையில் சுயநிர்ணய உரிமை கொண்ட நாம் ஒரு தன்னாட்சிக்காகப் போராடுகின்றோம். அந்தத் தன்னாட்சி உரிமையை நிலை நாட்டுவதற்காக இராணுவ அரசியல படிகளாகப் போராட்டம் தொடர்கிறது.

### இலட்சியத்திற்கு இருவழிகள்

மனிதனுக்கு இருகண்கள்போல விடுதலை இலட்சியத்திற்கு இரு வழிகள் உண்டு. ஒன்று இராணுவ வழி, இரண்டு அரசியல் வழி. இராணுவ பலத்தை நிறுவி இலங்கைத் தீவில் ஒரு சமபல நிலையை நாம் செலுத்தியபோது யுத்தம் நின்றது. ஏனெனில், எம்முடன் யுத்தம் செய்யமுடியாது. ஆனால், தீர்வுக்கான வழிகள இன்னும் பிறக்கவில்லை. ஆனால், பிறக்காமல் இருக்கமுடியாது. ஏனெனில், அரசியல் சமநிலை அடையும்போது எமது பிரச்சினைக்கான தீர்வை யாரும் தரத்தேவையில்லை.

### தீர்வு தானாக வரும்

இன்றைய சூழலில் உள்ளக சுயநிர்ணய உரிமையூடாக அமைதிக்கான இடைக்காலத் தனாட்சி வரைவு ஒன்றின் மூலம் இந்த இலங்கையில் உள்ள பிரச்சினைக்குத் தற்காலிகமான வழிமுறைகளை நாம் முன்வைத்துள்ளோம். அதை ஏற்றுப் பேசவேண்டுமென்று நாம் விரும்பி நிற்கின்றோம்.

சிங்கள சமூகத்தில் அந்தக் கருத்தில் ஒரு ஏற்பு இருக்கிறது.

இது இலங்கை அரசியலில் நல்ல சந்தர்ப்பம். தமிழர்கள் தமது வீரம் செறிந்த அர்ப்பணிப்புமிக்க விடுதலைப் போராட்ட வலிமையை ஏற்படுத்தியுள்ளார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைச் சிங்களப் பேரினவாத அரசியல் தலைவர்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டும். இதற்கான நெறிப்படுத்தலைச் சிங்களச் சமூகம் மேற்கொள்ளவேண்டும்.

சமூகம்தான் அரசைத் தீர்மானிக்கின்றது. எனவே, சமூகம் அதற்கான தீமானத்தை எடுக்க வேண்டும்.

சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் சரியான வழிக்கு வந்து தீர்வு தொடர்பாகப் பேச வேண்டும். இதில் இருந்து தவறுவார்களேயானால் சர்வதேச ஆதரவுடன் ஏற்புடைய வகையிலே யாரும் எங்களை நெருங்காத வகையில், எம்மீது ஆதிக்கம் செலுத்தாதவகையில் 'அரசியல் இராணுவ, இராஜதந்திர வழிமுறைகளூடாக நாங்கள் முன்னேறி வெளியக சுயநிர்ணய முறை மூலம்நாங்கள் தீர்வுகாணும்போது எங்களை உலகம், சமூகம் பயங்கரவாதிகள் எனக் கூற முடியாது - என்று கூறினார் இளம்பரிதி.

நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் க.ஜெயராஜ், சாவகச்சேரிப் பங்குத் தநதை அருட்திரு. கு.இரவிச்சந்திரன், பாஸ்டர் ஜேசன்ஸ் செல்வராசா உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.




நிகழ்வில் நூலினையும் இறுவெட்டினையும் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியிட்டு வைக்கத் முதற்பிரதியைத் தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் க.ஜெயராஜ் பெற்றுக்கொண்டார். வெளியீட்டுரையை யாழ். மாவட்டக் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் எஸ்.வளநாடனும் -

அறிமுகவுரைகளை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் க.குமாரசாமியும், யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் க.ஆர்வலனும் நிகழ்த்தினர்.

(ப-31)

# தேவாரத் திருமுறைகளை சிறுவர்கள் பாராயணம் செய்யவேண்டும்

நவாலி,டிச.2

பாடசாலைகளில் இன்று சமயக் கல்வி போதிப்பது மிகவும் குறைந்துள்ளது. இதனை சமயவிருத்திச் சங்கங்களினூடாகவும் ஆலயங்களின் நிர்வாகங்களினூடாகவும்தான் நிவர்த்தி செய்யவேண்டும்.

- இவ்வாறு வலி.தென்மேற்குச் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் இடம்பெற்ற சைவப் பெருவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் வ.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலர் மேலும் குறிப்பிடுகையில்:-

பெரிய கோயில்களைக் கட்டிவிட்டால் மட்டும் எமது கனவுகள் முடிவடைந்துவிட்டது என்று நாம் கருதக்கூடாது. குழந்தைகள் காலை, மாலை 10 நிமிடமாவது தேவாரம், திருவாசகம், திருமுறைகள் என்பவற்றைப் பாராயணம் செய்ய வேண்டும். இவர்கள் இப்படிச் செய்வதற்குப் பெரியவர்கள் வழிகாட்டுகிறார்களா என்பது சந்தேகத்திற்குரிய விடயமாகவுள்ளது.

பிள்ளைகளை வாரத்தில் வெள்ளி, ஞாயிறு தினங்களில் அரைமணி நேரமாவது பஜனைகள தேவாரம், திருமுறைகள் என்பவற்றைப் படிப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்க சமய அபிவிருத்திச் சங்கங்கள், ஆலயங்கள் என்பன முன்வரவேண்டும் - என்றார்.

தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், இளைப்பாறிய உதவி ஆசிரியர் க.கதிரேசு, இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(ப-100)

# இலக்கணம் தெரியாமல் படித்து தேறமுடியாத மொழி சமஸ்கிருதம் - பேராசிரியர் சிவசாமி

வலி.தெற்கு,டிசெ.2

"ஒருமொழியைக் கற்பதற்கு இலக்கணம் அவசியம். ஆங்கிலப் பாடத்தை இலக்கணமின்றியும் படிக்கலாம். ஆனால், சமஸ்கிருதத்தை இலக்கணம் இன்றிப் படிக்கமுடியாது. இலக்கணத்தை இலகுவாக்கி "சமஸ்கிருத நியாய லகு வியாகரணம்" என்ற நூல் மூலம் பல்கலைக்கழக மாணவரும் புகுமுக மாணவரும் கற்பதற்கு வழி செய்துள்ளார் அமரர் பிரம்மஸ்ரீ கி.சுப்பிரமணிய சாஸ்திரிகள்."

"சமஸ்கிருத நியாய லகு வியாகரணம்" நூல் அறிமுக விழாவில் உரையாற்றிய யாழ். பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத பேராசிரியராக விளங்கிய இலக்கிய கலாநிதி வி.சிவசாமி இவ்வாறு கூறினார்.

நல்லூர் சிவன்கோயிலில் நடைபெற்ற இந்நூல் அறிமுக விழாவுக்குப் பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ண ஐயர் தலைமை வகித்தார்.

இலக்கிய கலாநிதி வி.சிவசாமி தமது உரையில் கூறியதாவது:-

இலங்கையில் மட்டுமல்ல லண்டன் போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் சமஸ்கிருதம் பயில்வோருக்கு ஏற்றவகையில் ஆஙகிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மூனறு மொழிகளில் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

ஒருமொழியைக் கற்கும்போது முதலில் ஒலி வரிவடிவத்தில் அமைவது முக்கியம். வரிவடிவத்தில் தொடங்கி சமஸ்கிருத இலக்கணத்தைச் சிறிதுசிறிதாக வளர்க்கக் கூடிய முறையில் இந்த நூல் அமைந்துள்ளது ஆசிரியரின் அனுபவத் தன்மையைக் காட்டுகிறது - என்றார்.

நூல் பற்றி விமர்சனம் செய்த இளைப்பாறிய அதிபர் சி.சிவசரவணபவன் (சிற்பி) கூறியதாவது:-

இலக்கணம் என்பது வரம்பு. அதனை மீறக்கூடாது. பேராசிரியர் வித்தியானந்தன் சமஸ்கிருத இலக்கணத்தை நகைச்சுவை கலந்து கற்பித்தார். பேராசிரியர் கைலாசநாதக் குருக்களோ நகைச்சுவை எதுவுமின்றி, இலக்கணம் என்றால் வெறுப்பு ஏற்படாதவகையில் எளிமையாகக் கற்பித்தார்.

சமஸ்கிருதம் என்றால் அதிகம் பாடமாக்க வேண்டும் என்பதால் பலர் அதனைப் படிக்காமல் விட்டனர். சுப்பிரமணிய சாஸ்திரிகள் தமது நூலில் நியாயபூர்வமாக, இலக்கண விதிகளை இன்றைய மாணவர்களின் கேள்விகளுக்கு விடைதரும் வகையில் உதாரணங்களுடன் விளக்கிக் கூறியுள்ளார் என்று - கூறினார்.

(ப-152)

# விவசாயத்துக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்துகொடுக்கப்படும்

## அந்தணத்திடல் கிராம மக்களுக்கு அரச அதிபர் உறுதி

கரவெட்டி,டிசெ.2

விவசாயத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரச அதிபர் என்ற ரீதியில் நான் செய்து தருவேன்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

வடக்கு - கிழக்கு விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அந்தணத்திடல் கிராமத்தின் பொதுமண்டபத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்பகுதி மக்கள் சிறந்த விவசாயிகளாக இருந்தபோதிலும் உவர்நீர் காரணமாகவும் இடபெயர்வு காரணமாகவும் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

இதன் காரணமாக 2002 ஆம் ஆண்டு 'நியாப்' நிறுவன உதவியுடன் கப்பூது அந்தணத்திடல் நெடுக்கிராய்க் குளத்தைப் புனரமைத்ததுடன் குடிதண்ணீர் வசதிகளையும் செய்துகொடுத்தோம். இதன் பயனாகத் தற்போது இக்கிராமத்தில் உள்ள நீர்நிலைகள் நன்னீராக மாறி வருகின்றன. இதனைப் பயன்படுத்தி நீங்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடவேண்டும்.



மேலும், இப்பயிர்ச்செய்கையால் இப்பகுதி விவசாயிகள் மட்டுமன்றி, பொதுமக்களும் அதிக நன்மைபெற வாய்ப்புண்டு. இதற்கான அனைத்து உதவிகளையும் அரச அதிபர் என்ற முறையில் நான் செய்து தருவேன் - என்றார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக 'நியாப்' பிரதித் திட்டமிடற் பணிப்பாளர் கா.பத்மநாதன், கரவெட்டிப் பிரதேச செயலக உதவித் திட்டமிடற் பணிப்பாளர் பு.நடராசா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாகக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.பராஜசேகரம், கிராம அலுவலர்களான தி.வரதராசன், சி.ஆனந்தராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ப-203-70)

# தமிழ்தேசியத்திற்கு எதிரான செயல்களுக்கு ஆதரவளிக்காதீர்

வலி.வடக்கு,டிசெ.2

தமிழீழ விடுதலைப் போராட்டம் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்ற போதிலும், எந்தவொரு மதச் சண்டைக்கும் வடக்கு - கிழக்கில் இடமில்லாத முறையிலேயே எமது தலைவர் போராட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கின்றார்.

- மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் க.செழியன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேசங்களுக்கு உட்பட்ட சிகையலங்கரிப்பாளர்களுக்கான இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமான கருத்தரங்கொன்று சங்கத் தலைவர் ரகு தலைமையில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய செழியன்:-

சாதியம் என்று ஒன்று இல்லை. ஒரு தொழிலைச் செய்வதில் யாரும் வெட்கப்படத் தேவையில்லை. ஏனைய அரச உத்தியோகத்தர்களும் தொழிலாளர்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறையில் குடும்பத்துடன் இருக்கலாம் என்றால், ஏன் நீங்களும் அந்த நாளில் ஓய்வு பெறக்கூடாது. அதற்காகவே ஞாயிற்றுக்கிழமையயை ஓய்வு நாளாக்கும்படி வேண்டியுள்ளோம்.

இன்று எம் மத்தியில் எழுச்சி நிகழ்வுகள் ஏன் இடம்பெறுகின்றன என்பதையிட்டு சிந்திக்கவேண்டும். எம்மத்தியில் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இம்மண்ணில் நிலைகொண்டுள்ளனர். இதேநேரம் அரசு கூறுகின்றது கொழும்பில் பாதுகாப்புச் செயற்பாடு போதியதாக இல்லையென்று.

இங்கு அப்பக்கடைகளும், களியாட்ட விழாக்களும் நடத்திவரும் இராணுவத்தை கொழும்புக்கு அழைத்துப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தலாம். ஆனால், சிங்கள இராணுவத்தின் மூலம் எம் மண்ணில் கலாசார சீரழிவுகளையும், தமிழ்த் தேசியத்திற்கு எதிரான செயற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகவே இம்மண்ணில் இராணுவத்தை நிலை நிறுத்தியுள்ளனர்.

நாம் இராணுவத்தின் எந்தவொரு தமிழ்த் தேசியத்திற்கு எதிரான நடவடிக்கைக்கும் ஆதரவாக இருந்துவிடக்கூடாது. இதனை முறியடிக்க வேண்டிய பொறுப்பு எம் எல்லோருக்கும் உண்டென்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டிய காலகட்டம் இதுவாகும் - என்று கூறினார்.

(ப-60)

## 31ஆம் நாள் அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 12 - 10 - 1942

மறைவு 02 - 11 - 2004

### அமரர் கிருஷ்ணன் இராசதுரை (கணேஸ்)

அன்பும் பாசமும் நிறைந்த அப்பா!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
முப்பத்தொரு நாள்கள் நகர்ந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்!

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவரையும் இன்று (02-12-2004) வியாழக்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக்கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சத்திரங்கை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை,

- குடும்பத்தினர்.

(39143) (26-14-15)

## ஓம் ஸ்ரீ சாயிராம்
## சப்த ஆண்டுகளில் இதய அஞ்சலிகள்



வையத்தில் : 14 - 12 - 1917

தெய்வத்துள் : 20 - 11 - 1997

### அமரர் சின்னத்தம்பி சரவணமுத்து

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும், சமய, சமூக சேவையாளரும்)

திகதி: 02.12.2004 திதி: கார்த்திகை அபரபக்க சஷ்டி

தளரும் போது தந்தையாய்!
வளரும் போது குருவாய்! - எம்
வாழ்வுக்கு வழிகாட்டி வளமாக
வாழ வைத்தீர்!
இன்று,
உம் சொல்லே எம் செவியில் மந்திரமாய்
உம் பணியே என்றென்றும் எம் பணியாய்
உம் வழியைத் தொடரும் - எம் பாதங்கள்
உமைத் தொடர........
ஏழு ஆண்டுகள் நிறைவாக நீர் இன்று
வரம் தருவீர் எழுமைக்கும்
எம் தந்தை நீர் என்றே!
"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"குமாரபுரி",
கைதடி வடக்கு.

சாயி சரவணமுத்து
குடும்பத்தினர்.

(39128) (24-14-15-26)

## ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02 - 05 - 1948

விண்ணில் 02 - 12 - 1995

### திருமதி மாரிஸ் ரெல்லா செபஸ்ரியன்

(தவமணி)

எங்கள் நலனுக்காக உன்னையே அர்ப்பணித்த தவமணியே!
உங்கள் நினைவு எமது நெஞ்சங்களில் நீங்காது
நிலைத்திருக்கும்.

இன்று (02.12.2004) வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் நடைபெறுகின்ற திருப்பலியில் பங்குகொண்டு ஆறுதலுக்காக ஜெபிக்க வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
யூட்கொணரி, எதல் கரோலின்,
எல்விஸ்,கிளமென்ற் றெக்ஸ்,
செபஸ்ரியன்.

இல.215, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/39399) (42-26-14-15)


அதிக சக்தியைத் தந்து
வயிற்றுப் போக்கை நிறுத்தும்

Brownson Arrowroot Powder

பிரவுண்சன் அரறூட் மாவு

உண்மையானது. நம்பிக்கையானது என்று பரீட்சிக்கப்பட்டது. பாரம்பரியமாக வைத்தியர்கள் அறிவுறுத்தும் அறூட் கஞ்சி குழந்தைகள். வயதானவர்கள் அனைவருக்கும் போசாக்குமிக்க ஓர் உணவு

யாழ் நகரில் கிடைக்குமிடம்
ஸ்ரீ காந்த் எசன்ஸ் அன் குரோசரீஸ்
161,K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-2219

TALENT

BROWNSON INDUSTRIES
139,பாங்ஷால் வீதி, கொழும்பு - 11
Tel : 2327197, Fax : 2458507


### தீவக வலயத்துக்கு புதிய பணிப்பாளர்

குருநகர்,டிசெ.2

வெற்றிடமாகவுள்ள தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் பதவிக்குத் திருகோணமலை மாகாணக் கல்விப் பணிமனையில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரியும் எஸ். மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார் என தீவக வலயக்கல்விப் பணிமனை மூலம் தெரிய வந்தது.

தீவக வலயக்கல்விப்பணிப்பாளராகக் கடமைபுரிந்து அகால மரணமடைந்த பொ. வேணுகோபால வாணிதாசனின் கடமையை யாழ்.மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தற்காலிகமாக நிறைவேற்றி வந்தார். (எ-51)

### அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணக்கல்வி வலயத்தைச் சேர்ந்த அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (8)

## மரண அறிவித்தல்கள்

### நமசிவாயம் சிவபாதம்

(புக்தொளி மாஸ்ரர்)



அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சிவபாதம் (இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (30.11.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - திலகவதி ஆகியோரின் மருமகனும் ருக்குமணிதேவியின் அன்புக் கணவரும் சிவலோகநாதன் (பிரான்ஸ்), சித்திராதேவி, சித்திரலேகா (கனடா), சிவதனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகைபாகன், மோகனச்சந்திரன் (கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ), பாமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கேசவி, கேதுசன், ஆர்த்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02.12.2004) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணிக்கு (பழைய நேரம்) காக்கைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'செல்வ அகம்,'
ஆனைக்கோட்டை.

(சி-39418) (26-14-15)

தகவல்:
சி.ருக்குமணிதேவி
(மனைவி).

### திருமதி மங்கையர்க்கரசி பரநிருபசிங்கம்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி பரநிருபசிங்கம் கடந்த 27ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

அன்னார் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா பரநிருபசிங்கம் அவர்களின அன்பு மனைவியும் கிருஷ்ணலீலா, அமரசிங்கம் (Canada), இந்திரலீலா, பாலச்சந்திரன், பாலேந்திரன் (Canada), சரோஜினி, மகேந்திரன் (Canada), விஜயலஷ்மி, ஜெயலஷ்மி (Canada), ராஜலஷ்மி (Canada), கணேந்திரன் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற குணசிங்கம், சந்திரவதனி (Canada), இராஜசூரியர் (U.K.), இந்திரகுமாரி (Canada), இராஜகுமார் (Saudi), மஞ்சுளா (Canada), கேதீஸ்வரன் (Master Feed Ltd.), நடேசன் (Canada), சசிகுமார் (Canada), ஞானம்பாள் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், கந்தசாமி, நடராஜா, சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நவரட்ணம்மா, தனலஷ்மி, காலஞ்சென்ற செல்வமணி ஆகியோரின் மைத்துனியும் சியாமினி, சியாமதி, சியாமீரா, சுதர்சன், சுதாகரன், தர்சினி, மயூரன், கோகுலன், தீபா, நிருபா, பிரவீன், பவித்ரா, கபிலேஷ், காயத்திரி, வெங்கடேஷ், சாயீசன், பிருந்தா, ஆர்த்திகா, ராகுலன், நிவேதா, நிராஜ், அபர்ணா, அனுஜன், அபிஷேக், அகல்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நேற்று (01.12.2004) புதன்கிழமை அவரின இல்லமான 365/1, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு - 03 இல் காலை 9மணி முதல் வைக்கப்பட்டு, பின்பு இன்று (02.12.2004) வியாழன் காலை 9மணி முதல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 02.12.2004 வியாழன் பிற்பகல்3 மணிக்கு நடைபெற்று, பி.ப5 மணியளவில் பொரளை கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

365/1, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை,
கொழும்பு - 03.
T.P.: 0114 721380

(சி-39418) (33-14-19-26)

தகவல்:
க.கேதீஸ்வரன்.


புதிய பிரிவுகள் ஆரம்பம்

External Degree
2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)

G.A.Q. | 1st inCom | B.A. | B.Com.

Minimum Requirement G.C.E. A/L 3 Passes
ஆரம்பம்: 04.12.2004

CIMA
Foundation level & Intermediate level
Medium: English Exam.: May & November
Minimum Requirement G.C.E. O/L (3C) Passes
ஆரம்பம்: 04.12.2004

aat (SriLanka)
Stage 1 & Stage 2
Medium: Tamil & English Exam: june & December
Minimum Requirement: G.C.E. O/L 5 Passes or G.C.E. A/L 2 Passes
ஆரம்பம்: 04.12.2004

Further Details: Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road (Near Commercial Bank), Jaffna.

(சி-39265) (26-14-15)

# சிங்களத்தேசம் தமிழரை ஏமாற்றமுடியாதபடி வியூகம் வகுத்திருக்கிறார் தலைவர் பிரபா


**எம்** தலைவர் 1992ஆம் அண்டு தொடங்கி, மாவீரர் நாளையொட்டி ஆண்டு தோறும் உரை நிகழ்த்துவது வழக்கம். இவ்வாண்டு அவர் நிகழ்த்திய உரை 13ஆவது மாவீரர் தின உரையாகும். உலகத் தலைவர் எவரையும்விட, எம் தேசியத தலைவர் பிரபாகரன் நிகழ்த்தும் உரையை, ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல, உலகமெல்லாம் சிதறுண்டு வாழும் தமிழர்களும் இந்நாட்டின் சிங்களவர்களும் உலகின் அரசியல் வட்டாரங்கள் அனைத்தும் உன்னிப்பாகக் கவனித்துக் கருத்துக்களைப் பரிமாறுவது வழக்கம். உலகத் தலைவர்கள் அனைவிலும் பார்க்க குறைந்த சொற்களைப் பேசி நிறைந்த வெற்றியை ஈட்டிய ஒரே தலைவன் நம் பிரபாகரன் அவர்கள். பிரித்தானியப் பேரரசின் போர்த் தளபதியாகவும் தலைமையமைச்சராகவும் விளங்கிய சேர்.வின்சன் சேர்ச்சில் பற்றிக் குறிப்பிடுகையில், 'He Fought with words and Weapons' (சொற்கள் கொண்டும் போர்க் கருவிகள் கொண்டும் அவர் போரிட்டார்) என்று வரலாற்று ஆசிரியர்கள் வரைந்துள்ளனர். நம் தலைவர் அவர்களோ சொற்களை மிஞ்சுகின்ற அளவிற்கு, தன் செயல் வீரத்தால் உலகைக் கவர்ந்த பெருமகன். சிலரைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'சொல்வதைச் செய்பவர், செய்வதைச் சொல்பவர்' என்று கூறுவது வழக்கம். ஆனால், நம் பிரபாகரன் அவர்களோ தான் சொல்வதை மிஞ்சி செயற்படுவர். அவர் அடுக்குமொழி பேசுவதில்லை. அழகு தமிழ் பேசுவதில்லை. ஆனால், அவர் பேச்சில் சொல் அழகைவிடப் பொருள் ஆழம் நிறைய உண்டு. மேலெழுந்த நிலையில் அவர் சொற்களைக் கொண்டு, அவர் என்ன நினைக்கிறார் என்று சொல்வது கடினம். அவரின் ஆளுமையை உணர்ந்த நிலையில், அவரது ஒவ்வொரு சொல்லையும் ஊடுருவிப் பார்த்துத்தான் நாம் தீர்ப்பு வழங்கவேண்டும். மிகமிக நெருக்கடியான காலகட்டத்தில் அகவை 50 மலர்ந்த நிலையில், அவர் 27-11-2004 அன்று நிகழ்த்திய உரை, தமிழினத்திற்கு வாழ்வு கொடுக்கின்ற உரை மட்டுமல்ல, வையகத்தைத் தன்பால் ஈர்த்து வரலாற்றைப் படைக்கின்ற ஒரு உரையாகவும் மிளிர்கின்றது.

## மாவீரர் தின உரை: ஒரு பார்வை...

அவரின் உரையின் முழுப்பகுதியையும் நாம இங்கு ஆராயப் போவதில்லை. அதற்குரிய தேவையுமிங்கில்லை. ஆனால், சில கருத்துக்களை எம் நெஞ்சில் ஆழப் பதியும் முறையில், அவர் எடுத்துரைத்துள்ளார். இதோ! அவர் மொழிந்த ஆழம்மிக்க சிந்தனைச் செறிவுடைய சொற்கள். "எதிர்காலச் சுபீட்சமின்றி, சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழ முடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் எல்லைக் கோடுகள் உள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம்." என்று தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறுகிறார் என்றால், அது பொருள் தொக்கும் சொற்தொடர் ஆகும். இதை ஆங்கிலத்தில், "Bregnant with Meaning" என்றும் கூறலாம். பொருள் புரிய விரும்புபவருக்கு இது புரியவேண்டும். இதன் பொருளை உணரவிரும்பாதோர், அதன் விளைவை ஏற்றுத்தான் ஆகவேண்டும். இப்பேச்சில், தமிழர்கள் எதற்கும் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதை முதலில் கூறுகிறார். பின்பு சிங்களத் தலைமைப் பீடங்களைப் பார்த்து, 'எங்கள் எல்லை மீறிய பொறுமையைப் பலவீனம் என்று கொள்ள வேண்டாம்' என்றும் எச்சரிக்கிறார். 50ஆண்டுகளுக்கு மேலாக எம்மை ஏமாற்றிய சிங்கள இனம், தொடர்ந்தும் எம்மை ஏமாற்றாமல் இருக்கும்வகையில், உலகின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில், சிங்களப் பேரினவாதம் மீண்டும் வெறியாட்டம் ஆடாது உடனடியாகப் பேச்சுகளில் ஈடுபட்டு இடைக்கால அரசையாவது உருவாக்க, உலக நாடுகள் ஏற்ற அறிவுரையை வழங்கி, தம் பங்களிப்பைச் செய்யவேண்டுமெனக் கோரிக்கையும் விடுத்துள்ளார். தன் உரையில் மற்றோர் இடத்தில் ஸ்ரீலங்கா அரசுக்கு அவர் விடுத்துள்ள அவசர அழைப்பில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உடனடியாக நடைமுறைப்படுத்தும்படி வேண்டுகோளும் விடுத்துள்ளார். இவ்வேண்டுகோளைப் புறக்கணித்து, சிங்கள அரசு காலத்தை இழுத்தடிக்குமாயின், எமது மக்களின் துயரவாழ்வை நீடித்துச செல்ல சிங்கள அரசு முற்படுமானால், எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை எனவும் மேலும் எச்சரித்துள்ளார்.

### உலகிற்கு அழைப்பு

எமது வேண்டுகோளை சிங்கள அரசு புறக்கணிக்காது இருக்கின்ற முறையில், அழுத்தம் கொடுக்கும் முறையில் உலக நாடுகளுக்கு அவர் விடுத்துள்ள வேண்டுகோள், உலகின் கவனத்தை எம்பால் ஈர்த்தே எமது போர் நடவடிக்கை அமையும் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது.



'இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைப்பட்டுக் கிடக்கமுடியாது' என்று உள்ளம் தொடும் சொற்களை உரைத்துள்ள அவர் 'சிங்களத் தேசமானது, தமிழினத்தை அரவணைத்து இணைந்து வாழவும் விரும்பவில்லை. அதேசமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டும் கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி எதிர்கால சுபீட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்தும் வாழமுடியாது' என்று அவர் எச்சரிக்கும் பாங்கு, போரைத் தொடுக்கும் நிலைக்கும் அவர் தள்ளப்பட்டுள்ளார் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

மக்களின் அவசியத் தேவையை உணர்ந்த நாம் தமிழீழத்தை வற்புறுத்தாது இணைப்பாட்சியில் இனிய வாழ்வு வாழ்வோம் என்பதைக்கூட கூறாது மிகக் கீழிறங்கி நாம் கேட்டு நிற்பது இடைக்கால நிர்வாகத்தையே ஆகும். ஆனால், "சந்திரிகா அம்மையாரின் முரண்பட்ட, ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலைப்பாடுகளைப் பார்க்கும் போது அவரது அரசானது தமிழ் மக்களுக்கு ஒரு இடைக்காலத் தீர்வையோ - நிரந்தரத் தீர்வையோ வழங்கப்போவதில்லை என்பது புலனாகும்" என்று அவர் கூறியுள்ள கூற்று சிங்கள அரசுக்கு இறுதி எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

பொறுமையின் எல்லைக்குள் சென்றுள்ள நம் தலைவர் அவர்கள் "சமாதான விரோதிகளையும் இனவாத சக்திகளையும் அவர்களது குளறுபடியான கொள்கைகளையும தனது கூட்டாட்சித் திரைக்குள் மூடி மறைதது, விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்த முனைகிறார் சந்திரிகா" என்று கூறும் நம் தலைவர் அவர்கள், "சமாதான முகமூடி அணிந்து நடிக்கும் சந்திரிகா அரசின் உண்மையான முகத்தை அனைத்துலகச் சமூகம் அடையாளம் கண்டு கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என்றும் கூறுகிறார். அவர் உலகைப் பார்த்து விடுக்கின்ற வேண்டுகோள் வெறும் வெற்றுரை இல்லை. மாறாகப் பொருள் பொதிநத பொன்னுரையாகும்.

விலைபோக மறுக்கின்ற நம் தலைவரின் உரை, இவ்விதம் அமையும் என்பதை நாம் ஊகித்த முறையில்தான் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் நான் நிகழ்த்திய உரையில், "இவ்விறுதி வாய்ப்பினை சிங்களத் தலைமைப்பீடம் பயன்படுத்தத் தவறுமாயின் 20 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கையின் எதிர்காலம், ஒரேயொரு மனிதனின் கையில்தான் தங்கியிருக்கிறது" என்று கூறி 'அந்த மனிதன் வேறுயாருமில்லை அது வேலுப்பிள்ள பிரபாகரன்தான்' என நாம் ஓங்கியொலித்தோம். எம் உரையை அடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் 'உங்கள் பேச்சின் உட்பொருள் என்ன? என்று கேட்ட போது அப்பேச்சின் உட்பொருள் எதுவென்பதைக் காலம் உணர்த்தி நிற்கும், என புன்முறுவலுடன் நாம் விடைகூறினோம். காலம் நல்ல தீர்ப்பை வழங்கும். எமது இனத்தின் எதிர்காலம் ஏற்றம் மிக்கதாக அமையும். அச்சம் தவிர்த்து வீரத்தோடு போராடின், அகிலம் எங்கள் நியாயத்தை உணர்ந்து, எம்பக்கம் சார்ந்து குரல் எழுப்பும். தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம். ✪

மா.க.ஈழவேந்தன்
நாடாளுமன்ற உறுப்பினர்

# உதயன் பதிவில் பொதிந்தவை

கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.

உதயனின் உதயகால தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் பழக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.

## 1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில்...

12.12.1985

★ 2 மணிநேரமாக மக்கள் நடுக்கம்

துப்பாக்கிச் சூடு; குண்டு வெடிப்பு யாழ்ப்பாணம் நேற்று அதிர்ந்தது

இராணுவம் திடீர் பாய்ச்சல்;
பெரியகடையில் இருவர் பலி;
பெருமாள்கோவில்பகுதி முற்றுகை

13.12.1985

★ 15 வாகனங்களில் ஆயுதப்படையினர் வந்தனர்

குண்டுவெடிப்பு, துப்பாக்கி வேட்டால் உருத்திரபுரம் கலங்கியது

13.12.1985

கனடா விமான விபத்து

250 இராணுவ வீரர்கள் பலி!

13.12.1985

உருத்திரபுரம் சம்பவம்:

வயல்களில் எட்டுச் சடலங்கள்

25 பேருக்கு துப்பாக்கிச் சூட்டுக் காயம்
இராணுவம் நடைபவனியாக கிளிநொச்சி திரும்பியது

13.12.1985

அரசாங்கம்-கூட்டணி நேரடிப் பேச்சு

இந்தியா ஏற்பாடு செய்கிறது

14.12.1985

வடபகுதிக்கான ரயில் சேவை இடைநிறுத்தம்

வவுனியாவில் அகதிகளுக்கு ஒரே முகாம்

உதவி அரசாங்க அதிபர்களுக்கு பணிப்பு

14.12.1985

# சிறுபான்மை அடையாளங்கள் ரூபவாஹினி நிறுவனம் புறக்கணிப்பு

கொழும்பு, டிசெ.2

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் செய்தி வாசிக்கப்படும் மேடையின் பின்னணியில் காணப்படும் தேசியக் கொடியில் சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்ணங்கள் காணப்படவில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகத்துறை அமைச்சருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் பணிப்பின் பேரில் தேசிய ரூபவாஹினி ஒளிபரப்பின் பல்வேறு அம்சங்கள் 60 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

மாற்றியமைக்கப்பட்ட செய்தி வாசிக்கப்படும் மேடையின் பின்னணியில் இடம்பெறும் தேசியக்கொடியில் சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பச்சை, செவ்விளநீர் வர்ணங்கள் காணப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடு செய்தும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது. (ஜ-204)

## பதவி விலக உள்ளார்

கடந்த இரண்டரை வருட காலமாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உப தலைவராகப் பணியாற்றிய ஹக்றுப் ஹொாக்லண்ட் எதிர்வரும் 8ஆம் திகதி பதவியில் இருந்து விலகுகின்றார்.

இவருக்குப் பதிலாக வக்னோ விங்கிள் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-8)




## கண்ணீர் அஞ்சலி

எமது கிராமத்தின் சமாதான நீதிவானும் உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமாகிய

### ந.சிவபாதம் (புத்தொளி)

அவர்கள் 30-11-2004 செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு நாம் அதிர்ச்சியும் ஆழ்ந்த வேதனையும் அடைந்தோம். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உபதபாலகம், ஆனைக்கோட்டை. (39165) (26-14-44)

உப தபாலதிபரும், தபால் ஊழியர்களும்.



## கண்ணீர் அஞ்சலி

யாழ் .தாதியர் பயிற்சிப் பாடசாலையில் 'A' 2002 பிரிவில் பயிற்சி பெறுகின்றவரான தாதிய மாணவி செல்வி செ.செல்வறஜனி அவர்களின் அன்புத் தந்தை

### செல்வராஜா

அவர்களின் மறைவையிட்டு நாம் துயரமடைகின்றோம். அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
'A' 2002, 'A' 2003 பிரிவு தாதிய மாணவர்கள்,
குடும்பநல பயிலுநர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(சி-39180)934-14-26)


## பத்திரிகையாளர் கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.2

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவும் மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய நிறுவனமும் இணைந்து நடத்திய பத்திரிகையாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான கருத்தமர்வு நிகழ்வு அண்மையில் மன்னார் வாழ்வுதயக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வாழ்வுதய இயக்குநர் அருட்திரு. பி.ஜேசுராஜா அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் இலங்கைப் பத்திரிகை ஆணைக்குழுவின் பிரதான பணிப்பாளர் திருமதி மெனிக் மெண்டிஸ், அருட்திரு. பி.ஜேசுராஜா அடிகளார் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

(10-202)


## தனிநபர் நன்கொடைத் திட்டம்

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கால் துண்டிக்கப்பட்டு வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட வலுவிழந்த தமிழ்மக்கள் இச்சுதந்திரத் தனிநபர் நன்கொடைத் திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பதாரர் தனது சுயவிவரங்களைக் குறிப்பிட்டு, தான் காலினை இழந்தவர் என்பதையும், முச்சக்கரவண்டியைப் பெறுவதற்குத் தான் தகுதியுடையவர் என்பதையும் தனது பிரதேச செயலர் மூலம் உறுதிப்படுத்தி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். பாடசாலை மாணவர்களாயின் அவர் கல்வி கற்கும் பாடசாலை அதிபரினால் விண்ணப்பங்களை உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

இத்திட்டத்தின் சிறப்பை உணர்ந்த சிலர் ஏற்கனவே எம்முடன் நன்கொடையாளராக இணைந்துள்ளனர். நன்கொடையாளர்களே கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களைப் பரிசீலனைசெய்து பயன்பெறுபவரைத் தீர்மானிப்பர். இத்திட்டத்தின் மூலம் நன்மைபெற விரும்புபவர்கள் கீழே குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும். விண்ணப்பங்களை அனுப்பாது வேறு நபர்களுடன் தொடர்புகொள்வதன் மூலமோ அன்றி வேறு வழிகளிலோ இத்திட்டத்தின் மூலம் நன்மைபெறமுடியாது என்பதைக் கருத்திற்கொள்ளவும்.

அடையாள நன்கொடை வழங்கப்பட்ட பின்பு இத்திட்டம் சம்பந்தமான முழு விவரங்களும் வெகுஜன தொடர்புசாதனங்கள் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்திப் புதிய நன்கொடையாளர்களையும் இணைப்பதுடன், அவர்களால் தெரிவுசெய்யப்படும் பயனாளிகளின் விவரங்களும் பகிரங்கமாக வெளியிடப்படும்.

*குறிப்பு:*

*இது ஒரு சுதந்திர தனிநபர்* நன்கொடைத் திட்டம். இத்திட்டத்தின்படி பயனாளிகளுக்கான முழுச்செலவையும் ஒரு நன்கொடையாளியே பொறுப்பேற்கின்றார். இதனால், இத்திட்டத்திற்கென உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ நிகழ்ச்சிகள் நடத்தவும் வேறுவழிகளிலே நிதி திரட்டவும் தனிநபருக்கோ, குழுக்களுக்கோ அனுமதி அளிக்கப்படவில்லை என்பதைத் தெரியப்படுத்துவதுடன், இது விடயமாகப் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

*விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:*

**தனிநபர் நன்கொடைத் திட்டம்,**
**யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்,**
இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(39177)(34-14-44-26)



## கண்ணீர்க் காணிக்கை

09 - 02 - 1970



01 - 12 - 2004

யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய ஆசிரியை

### திருமதி விஜியகுமாரி கதிர்காமதாஸ்

எம் பாடசாலை ஆசிரியை விஜியே!
எம் எல்லோர்க்கும் அன்பான உறவே!!
விதியின் நிமித்தம் விடியலில் கேட்ட
உன் மரணச் செய்தியினால்
ஆறாத் துயரில் ஆழ்ந்துவிட்டோம் - நாம்
நித்தம் காணும் நின் வதனம்
இன்று காணாது கலங்குகின்றோம்
எமையெல்லாம் மறந்து - நீ
ஏகபரனிடம் சென்றதேனோ?
கனிந்து உள்ளம் உருகி - எம்
கண்ணீர்ப் பூக்கள் காணிக்கை.

இவரின் பிரிவால் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ள அன்புக் கணவர், பாசமிகு பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தகவல்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.

(39176)(42-26-14-44)


## கண்ணாடிகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெ.2

மன்னார் மறைமாவட்ட வாழ்வுதயம் நிறுவனமும், கொழும்பு பட்டக்கண்ணு அமைப்பும் இணைந்து அண்மையில் மன்னார் ஆதார வைத்தியசாலையில் நடத்திய சிகிச்சை முகாமில் சிபாரிசு செய்யப்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

வாழ்வுதயக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வாழ்வுதய இயக்குநர் அருட்திரு. பி.ஜேசுராஜா அடிகளார் கடந்த மாதம் இடம்பெற்ற பரிசோதனையின்போது சத்திர சிகிச்சைக்கென சிபாரிசு செய்யப்பட்ட நோயாளிகளுக்கு வெகுவிரைவில் மன்னார் ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை முகாம் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

(10-202)

## இலட்சார்ச்சனை

வலி.தெற்கு,டிசெ.2

விநாயகர் விரதத்தை முன்னிட்டு தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தானத்தில் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு தற்பொழுது இலட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது.

நவம்பர் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகிய இலட்சார்ச்சனை எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெறும்.

17ஆம் திகதி பகல் அஷ்டோத்திர சதசங்காபிஷேகம், பெருங்கதை படித்தல், திருவுலா என்பன இடம்பெறும்.

தினமும் காலை 9.30 மணிக்கு ஆராதனைகள், அர்ச்சனை, ஹோமம், பூர்ணாகுதி ஆசீர்வாதம் என்பன நடைபெறுமென பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.கணேசலிங்கக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

(10-152)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 634 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 30-11-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4130827-4146657 |

லக்கினம் கடகம்

வெற்றி இலக்கங்கள்

**20 21 35 44**

ஜக்பொட் பரிசு ரூபா.39,03,350/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 46,91,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,52,862 | 10/- | 35,28,620/- |
| 2.இலக்கங்கள் | 32,342 | 20/- | 6,46,840/- |
| 1.இல + லக்கினம் | 31,983 | 30/- | 9,59,490/- |
| 2.இல + லக்கினம் | 2,968 | 100/- | 2,96,800/- |
| 3.இலக்கங்கள் | 858 | 500/- | 4,29,000/- |
| 3.இல + லக்கினம் | 81 | 5,000/- | 4,05,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 39,03,350/- | - |
| மொத்தம் | 4,21,104 | - | 78,96,000/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 78,96,000/-

தொடர் இல. 5108139 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 டிசம்பர் 03ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4136814-4-32
4133475-3-97
4131516-7-07
4140077-1-55
4137902-7-52


## நிர்வாக சேவையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

கொழும்பு, டிசெ.2

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கல்வியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்II இற்கு பதவி உயர்வு பெற்றிருக்கும் அதிகாரிகளுக்கு நேர்முகப்பரீட்சை நடத்தி, இருக்கும் வெற்றிடத்திற்கேற்ப அவர்கள் தரம்I பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

இலங்கை நிர்வாகசேவை தரம்III இல் நிலவும் வெற்றிடங்களை 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சை மூலமும், தேர்ச்சி அடிப்படை மூலமும் நிரப்ப நடவடிககைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-204)

## கைலாசபதி நினைவுதின கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.02

பேராசிரியர் கைலாசபதி நினைவுதினக் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'சமகால இலக்கியமும் விடுதலைப்போராட்டமும்' என்னும் பொருளில் பேராசிரியர் சி.சிவசேகரமும், 'ஈழத்து இலக்கியத்தில் கைலாசபதியின் பங்களிப்பு' என்னும் விடயம் பற்றி கலாநிதி செ.திருநாவுக்கரசும் உரை நிகழ்த்துவர். (ஜ-204)


## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதம் நாகேஸ் (சின்னமணி) ஆசாரி



புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலாயுதம் நாகேஸ் (சின்னமணி) ஆசாரி அவர்கள் நேற்று 01.12.2004 புதன்கிழமை புங்குடுதீவில் காலமாகிவிட்டார்.

அன்னார் வேலாயுதம் தம்பதிகளின் அன்பு மகனும் சறோஜாவின் அன்புக் கணவரும் பராசக்தி (சாவகச்சேரி), செல்லம்மா, சுப்பிரமணியம், துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, பவானி, பகீரதி, பகீரதன், பாமினி, கேமதை (மாவீரர்) ஆகியோரின் அருமைத் தந்தையும் கல்யாணகுமார், பாஸ்கரன், ஜதீஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு - கேரதீவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (39172) (34-26-14-44)

தகவல்:
க.வசந்தகுமார் (வசந்தன்)
சகலன் - நல்லூர்.

### கந்தையா குழந்தைவேலு

(உரிமையாளர் - கந்தையா ஸ்ரோர்ஸ், அம்பலாங்கொடை, K.K.S. றான்ஸ்போட்)



வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் 47, அரசடி வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குழந்தைவேலு அவர்கள் நேற்று (01.12.2004) புதன்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலாங்கொடை வர்த்தகர் கந்தையா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற (நயினாதீவு, 5 ஆம் வட்டாரம்) செல்லையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பூம்பாவையின் அன்புக் கணவரும் சரவணநாதன் (யாழ்ப்பாணம்), சறோஜா (கொழும்பு), ஜெகநாதன் (பிரான்ஸ்), வனஜா (கனடா), சிவநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசொரூபி (யாழ்ப்பாணம்), சிவாநந்தன் (மத்திய வங்கி - கொழும்பு), நிவேதிகா (பிரான்ஸ்), மகேந்திரன் (மகம் - கனடா), பார்த்தினி (துசி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சோதிராஜ் (யாழ்.இந்துக்கல்லூரி), அமலறாஜ் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கஜன் (முகாமைத்துவம் - ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), அஜாமினன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), சனாதனன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), நிதர்சன் (பிரான்ஸ்), சௌமியா (பிரான்ஸ்), ஜெனிசா (பிரான்ஸ்), அபிகரன் (கனடா), வாகினி (கனடா), சொபிதா (பிரான்ஸ்), விஷ்ணுகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் நடராசா (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் - பிரான்ஸ்), நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் குலவீரசிங்கம் (லண்டன்), மகாதேவன் (யாழ்ப்பாணம்), சங்கரலிங்கம் (கொழும்பு), முருகவேள் (யாழ்ப்பாணம்), கமலாம்பிகை (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, அரசடி வீதி,
தட்டாதெருச் சந்தி , வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.
T.P.NO: 021 222 7360. (39174) (34-14-44-26)

தகவல்:
கு.சரவணநாதன்
(மகன்).

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விரைவில் இரண்டு கமநல சேவை நிலையங்கள்

## அமைக்கப்படும் என்கின்றார் உதவி ஆணையாளர்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இரண்டு கமநல சேவை நிலயங்கள் கட்டுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக கமநலசேவை நிலைய உதவி ஆணையாளர் தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முத்தையன்கட்டிலும் தண்டுவானிலும் இவ்விரு நிலையங்களும் கட்டப்படுவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அதனை கட்டி எழுப்புவது எமது கையிலேயேதான் தங்கியிருக்கிறது. அதற்கு அரச நிறுவனங்கள் இந்த மாவட்டத்திற்கு வந்துசேரவில்லை. குறிப்பாக விவசாய நிறுவனங்கள் இல்லை. வானிலை அவதான நிலையம் இல்லாததால் விவசாயிகள் கவலையடைகிறார்கள். மண் பரிசோதனை நிலையம் இல்லை. விவசாயக் காப்புறுதி இன்னும் விவசாயிகளுக்கு சென்றடையவில்லை. விவசாயப் பண்ணைகள் இல்லை. உதவி விவசாயப் பணிப்பாளருடைய சேவை இந்த மாவட்டத்திலே இல்லை. இப்படிப் பல குறைபாடுகளுக்கு மத்தியிலே விவசாயிகள் இருந்து கொண்டிருக்கின்றார்கள் - என்றார். (8-341)





மாவீரர்தின நிகழ்வின்போது மணலாறு துயிலும் இல்லத்தில் மணலாறு பிராந்தியத் தளபதி மகேந்தி ஈகைச்சுடர் ஏற்றுவதையும் மாவீரர் குடும்பங்களுடன் தளபதி மகேந்தி, துணைத்தளபதி சுடர், சிறப்புப் படையணித் தளபதி ஓவியன், காவல்துறையினர் நிற்பதையும் படங்களில் காணலாம் (படங்கள்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)

## வீதிகள் புனரமைக்கப்படாமையால் போக்குவரத்துச் செய்வதில் சிரமம்

பரந்தன்,டிசெ.2

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமங்களில் 2003ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தின்கீழ் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றபோதும் சில கிராமங்களின் வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாது உள்ளமையினால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் 121ஆம் கட்டைப் பகுதியில் புன்னை நீராவி அ.த.க. பாடசாலைக்கு அருகில் பிரமந்தனாறு செல்லும் பிரதான வீதி 2003ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டது.

இவ்வீதியைத் தொடர்ந்து புனரமைப்புச் செய்ய உலர் உணவுப் பொருள்களை உலக உணவு நிறுவனம் வழங்கவில்லையா அல்லது பொருள்களை வழங்கியிருந்தும் வேலைகள் நடைபெறவில்லையா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

(10-203-352)

## இறால் கறியுடன் உணவருந்தியவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்

விசுவமடு,டிசெ.2

கிளிநொச்சியில் உள்ள உணவகம் ஒன்றில் உணவருந்தியவர்களில் பத்துக்கு மேற்பட்டவர்கள் வயிற்று உபாதையின் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த திங்கட்கிழமை மேற்படி உணவகத்தில் இறால் கறியுடன் உணவருந்தியவர்களே உபாதைக்குள்ளாகினர்.

வயிற்றுவலி மற்றும் வாந்தி என்பன ஏற்பட்டதை அடுத்து இவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதனையடுத்து தமிழீழ சுகாதார சேவையினர் உணவகத்தை மூடியுள்ளனர்.

(10-402)

SHARP
be sharp



அதிரடி விலைக் குறைப்பு...
ஜப்பானியத்
தொழில்நுட்பத்துடன்
கூடிய
SHARP ரீ.வி.,
குளிர்சாதனப்
பெட்டிகள்



5 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்
விற்பனைக்குப் பிந்திய சேவையில்
பெற்றுக்கொள்ள.......
இன்னும் பல கொடுப்பனவுகள்.....
BROWNS GROUP BG ESTD 1875
பிறவுண்ஸ்
இல.89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-222 5150.

## புனரமைக்கப்பட்ட பாலம் திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்ப்பாணம் கண்டிவீதியில் பலத்தசேதமடைந்து காணப்பட்ட உமையாள்புரம் பாலம் புனரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் எளிமையாகத் திறந்துவைக்கப்பட்டது.

இப்பாலத்தை புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் திட்டப் பணிப்பாளர் செல்வி வி.நல்லதம்பி திறந்து வைத்தார்.

இந்தப் பாலம் சேதமடைந்ததால் ஏ-9 வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. (8-204)

## விரைவில் அடிக்கல்

பூநகரி,டிசெ.2

பூநகரிப் பிரதேச பாடசாலைகளில் ஒன்றான பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு இரு மாடிக் கட்டடம் ஒன்று 'நிக்கொட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளது.

(10-403)

## கரும்புலிகள் நினைவாலயம் மல்லாவியில் திறந்துவைப்பு

மல்லாவி வணிகர் கழகத்தால் மல்லாவி நகரின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள கரும்புலிகள் நினைவாலயம் கடந்த 25ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் லோறன்ஸினால் திறந்துவைக்கப்பட்டது.

14 கரும்புலிகளின் உருவப்படங்களைக் கொண்டு இந்நினைவாலயம் மல்லாவி வணிகர் கழகத்தால் சிறப்புற நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு மல்லாவி வணிகர் கழக செயலாளர் தனராஜ் தலைமையில் நடைபெற்றது.

முதலில் கரும்புலி மாவீரர்களின் பெற்றோர்கள் மல்லாவி மத்திய கல்லூரி மாணவிகளின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் வரவேற்று அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஈகைச்சுடரேற்ற, முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தமிழீழதேசியக்கொடியை ஏற்றினார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் கரும்புலி மில்லரின் உருவப்படத்திற்கு மாலை சூட்டினார்.

இந்நினைவாலயத்தில் கப்டன் மில்லர், மேஜர் அங்கயற்கண்ணி, லெப்.கேணல் போர்க், மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ், மேஜர் யாழிசை, மேஜர் தனிச்சுடர், மேஜர் இசைநிலா, மேஜர் சதா, கப்டன் ஈழவன், மேஜர் மங்கை, கப்டன் மொறிஸ், கப்டன் பூங்குழலி ஆகிய கரும்புலிகளின் உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. (8-322)

## சமூக வலுவூட்டாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

வட்டக்கச்சி,டிசெ.2

'நியாப்' செயற்திட்டத்தின்கீழ் 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சேவையாற்றிய சமூக வலுவூட்டாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்தில் நிர்வாக அலுவலர் மா.ஜெறாட் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட 'நியாப்' பிரதித் திட்டப் பணிப்பாளர் சிவகுமார், கிளிநொச்சி மாவட்ட 'நியாப்' திட்டப் பணிப்பாளர் வினோதராஜா, தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டக் கண்காணிப்புப் பிரிவுப் பணிப்பாளர் ஜெகாஸ், 'சேவா லங்கா' பிரதிநிதி தவமோகன், சிவபாலன், ராஜன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக வலுவூட்டல் வேலைத்திட்டங்களில் 'நியாப்' செயற்திட்டத்தில் 2003 ஆம் ஆண்டில் பங்கேற்ற 60 சமூக வலுவூட்டாளர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (10-203-405)

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் ஜி.ரி சற் நிறுவனத்தினர் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகளை பரவலாக நடத்தி வருகின்றனர். ... ஒரு கட்டமாக கடந்த வாரம் மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மேற்படி கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இக்கருத்தரங்குகளில் பாடசாலையிலிருந்து விலகிய பின்னர் தொழிற்பயிற்சி ஒன்றைப் பெறுக்கொள்வது தொடர்பாகவும் சுயதொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கான வழிகாட்டல்களையும் நிதியுதவிகளையும் பெறுவது தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (8-203-322)

## மூன்று யானைகள் சுட்டுக்கொல்லப்பட்டன

மல்லாவி,டிசெ.2

துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட ஐயன்கங்குளம் கிராமத்தில் கடந்த சில நாள்களாக யானைகள் வயல்களுக்குள் புகுந்து பயிர்களை நாசஞ்செய்து வந்துள்ளன.

இதனால் ஆத்திரமுற்ற அப்பகுதி விவசாயிகள் வேட்டைத் துப்பாக்கியை பயன்படுத்தி மூன்று யானைகளை சுட்டுக்கொன்றுள்ளனர். (8-203-322)

## முல்லை மாவட்ட பதிவாளர் அலுவலகம் தனியார் வீட்டில்

முல்லைத்தீவு மாவட்டப் பதிவாளர் அலுவலகம் தனியார் ஒருவரின் வீட்டில் பல சிரமங்களுடன் இயங்குகின்றது.

இச்செயலகத்திற்கான கட்டட வேலைகள் முற்றுப்பெறாமையால் தற்போது தனியார் வீட்டில் இயங்குவதாகவும் கட்டடவேலைகள் யாவும் பூர்த்தியான பின்னர் புதிய கட்டடத்தில் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.(8-353)

## புலமைப் பரிசில் பரீட்சையில் முதலிடம்



புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி செல்வநாயகம் சுபரஞ்சினி 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகள் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுள்ளார். இவர் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவியாவார்.

இப்பாடசாலையில் 10 மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (8-353)

## மல்லாவியில் சுகாதார விழிப்பூட்டல்

மல்லாவி,டிசெ.2

தற்போது பெய்துவரும் பெரும் மழையால் பரவக்கூடிய நெருப்புக்காய்ச்சல், செங்கண்மாரி, வாந்திபேதி போன்ற நோய்களையும் நுளம்புப்பெருக்கத்தையும் கட்டுப்படுத்துவது தொடர்பாக துணுக்காய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த சுகாதார உத்தியோகத்தர்கள் வீடுவீடாகச் சென்று விளக்கமளித்து வருகின்றனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ராஜலோஜினி அருளப்பு துரைசிங்கம்

திருமதி ராஜலோஜினி அருளப்பு துரைசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (01.12.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இளவாலையைச் சேர்ந்த அருளப்பு துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், ரஜீவனின் அன்புத் தாயாரும் அனித்தா, நிரோஜினியின் மாமியாரும் காலஞ்சென்ற திரு.திருமதி விக்டர் பிளோசம் பிலிப்ஸ் தம்பதியினரின் மூத்த புதல்வியும், இளவாலை ஆனாப்பிள்ளை - ராசையாவின் மருமகளும் நெப்போலியன் பிலிப்ஸ், காலஞ்சென்ற ராசதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.15, பாரதி வீதி,*
*திருகோணமலை.*
*026 2223564* (சி-39429)(11-45-33)

தகவல்:
அருளப்பு துரைசிங்கம்
(கணவர்)

## திருமதி பொன்னுத்துரை - பூரணம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல. 22 (பழைய இல. 08) பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பூரணம் நேற்று (01.12.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா-கதிராசியின் (வைத்தியர்) அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் நிர்மிலா (அரியாலை, சரஸ்வதி சனசமூக நிலைய பாலர் ஆசிரியர்), சகுந்தலா (ஆசிரியை-கொழும்பு), காலஞ்சென்ற பற்குணநாதன், மஞ்சுளா (நல்லூர் முருகன் சனசமூக நவீன முன்பள்ளிப் பொறுப்பாசிரியர்), சியாமளா (பாலர் ஆசிரியர்-கனடா), தர்ஷிலா (யாழ். நாரந்தனை கணேச வித்தியாலயம், இசைக் கலைமணி - ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற அற்புதம், இராசையா (ஓய்வு பெற்ற நீர்ப்பாசன இலாகா எஞ்சினியர் - அநுராதபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லையா, காலஞ்சென்ற இராசையா, காலஞ்சென்ற செல்வராஜா, காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற இரட்ணம் - சரஸ்வதி (கனடா), அன்னலெட்சுமி (கனடா), பாக்கியம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கணேஷன் (கொழும்பு), ரவீந்திரநாதன் (கனடா), பரமேஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று,பிற்பகல் ஒருமணியளவில் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.22(08) பலாலி றோட்,*
*யாழ்ப்பாணம்.* (39179)(11-45-33)

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி கதிர்காமதாஸ் விஜயகுமாரி

(ஆசிரியை, யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி.)

இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமதாஸ் விஜயகுமாரி நேற்று (01.12.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கதிர்காமதாஸின் (Cool Air- K.K.S.) அன்பு மனைவியும், தர்மலிங்கம் - தங்கப்பிள்ளையின் பாசமிகு மகளும், திலீப்குமார் (டென்மார்க்), பிறேம்குமார் (சுவிஸ்), மீனகுமாரி (டென்மார்க்), சாந்தகுமாரி (ஆசிரியை - மல்லாகம் ம.வி.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் உடுவில் கிழக்கைச் சேர்ந்த மகாதேவன் - நாகரத்தின தேவமலர் (தேவி) ஆகியோரின் அன்பு மருமகளும் தங்கலோஜினி, பிறேமதாஸ், நிர்மலதாஸ், கமலதாஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.*
(39184)(11-45-33)

தகவல்:
கதிர்காமதாஸ்
(கணவர்).

## சின்னத்தம்பி நகுலேஸ்வரன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை, வறுத்தலவிளானை வசிப்பிடமாகவும் கொண்டு கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான சின்னத்தம்பி நகுலேஸ்வரன் நேற்று (1.12.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பொன்னம்மா ஆகியோரின் மருமகனும், சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காயத்திரி, திருமருகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலச்சந்திரனின் அன்பு மாமனாரும், தாட்சாயினியின் அன்புப் பேரனும், தவனேஸ்வரியின் (லண்டன்) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2.12.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளங்கரை லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (39185)(11-45-33)

தகவல்:
கு.பாலச்சந்திரன்
(மருமகன்)

## குமார் வைத்திலிங்கம் முத்தையா

(முன்னாள் அறங்காவலர் சபை உறுப்பினர் - நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில்)



நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவில் வசித்து வந்தவருமாகிய குமார் வைத்திலிங்கம் முத்தையா அவர்கள் நேற்று (01.12.2004) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

தகனக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*380/7, கோவில் வீதி,*
*நல்லூர்.* (39182)(11-45-33)

தகவல்:
திருமதி தேவி கணேசலிங்கம்
(மகள்)

# பிரியாவிடை வைபவம்

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தில் சேவைபுரிந்து இடமாற்றத்தில் சென்ற பதின்மூன்று ஊழியர்களுக்கான பிரியாவிடை வைபவம் நேற்று யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. யாழ் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்த அலுவலக மேலதிக பிரதிப் பணிப்பாளர் (நிதி) க.தனரஞ்சிதராஜன், நிர்வாக உத்தியோகத்தர் எம்.சிவலிங்கம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.தெய்வேந்திரன், செல்வி எம்.அருள்நிதி ஆகியோர் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களின் சேவைகளைப் பாராட்டி உரைநிகழ்த்தினர். (10-51)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை- மானிப்பாய் சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2005

1. கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி:- 2004.12.13 நண்பகல் 12.00 மணிவரை
2. கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதி :- 2004.12.14 நண்பகல் 12.00 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி:- 2004.12.14 பிற்பகல் 2.00 மணிக்கு
4. கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப் பணம் ஆகியவற்றிற்குரிய பெறுமதி சேர்வரி 15 சேர்த்து அறவிடப்படும்.
5. மேலதிக விவரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும் தலைமையலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.
6. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம அவர்களுக்கு அனுப்புவதுடன் மறுபிரதி தலைமை அலுவலகத்தில் நேரிலோ அன்றோ பதிவுத் தபாலிலோ சேர்க்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை

| குத்தகைவிவரங்கள் | மாதவாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை வரிநீங்கலாக |
|---|---|---|---|---|
| 1. மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | |
| 1. மானி.பொதுச் சந்தை (து.ச.வ. தரிப்பிடம் உட்பட) | | 500/= | 2,000/= | 375,000.00/= |
| 2. மானி.பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 400/= | 300/= | 2,000/= | 210,000.00/= |
| 3. மானி.பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300/= | 300/= | 1,500/= | 40,000.00/= |
| 4. மானி. பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | | 300/= | 1,500/= | 20,000.00/= |
| 2. மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | |
| 1. சாவற்கட்டுச் சந்தை (து.ச.வ.தரிப்பிடம் உட்பட) | | 300/= | 1,500/= | 50,000.00/= |
| 2. ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக் கடை | | 300/= | 1,500/= | 190,000.00/= |
| 3. நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 400/= | 300/= | 1,500/= | 60,000.00/= |
| 4. நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300/= | 300/= | 1,500/= | 24,000.00/= |
| 3. பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | | | |
| 1. பண்.பொதுச்சந்தை (து.ச.வ.தரிப்பிடம் உட்பட) | | 300/= | 2,000/= | 250,000.00/= |
| 2. பண்.பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250/= | 300/= | 1,500/= | 15,000.00/= |
| 3. பண்.பொதுச்சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 200/= | 300/= | 1,500/= | 7,500.00/= |
| 4. பண்.பொதுச்சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 250/= | 300/= | 1,500/= | 7,500.00/= |
| 4. பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | |
| 1. மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250/= | 300/= | 1,500/= | 10,000.00/= |
| 2. மாசியப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 250/= | 300/= | 1,500/= | 30,000.00/= |
| 3. பெரியவிளான் சந்தை (து.ச.வ. தரிப்பிடம் உட்பட) | | 300/= | 1,500/= | 5,000.00/= |

(பிரான்சிஸ் விக்டர்)
செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேசசபை,
(சி-39432)(38-33-11-45)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச்செயலகம், மானிப்பாய்.
29.11.2004

# ஹற்றன் நஷனல் வங்கி
## ஏலவிற்பனை அறிவித்தல்

HATTON NATIONAL BANK HNB LIMITED

எமது யாழ்.வங்கிக் கிளையில் அடகு வைத்து 12 மாதங்களுக் குள் மீளப்பெறப்படாத அல்லது கால எல்லை நீடிக்கப்பெறாத அடகுப் பொருள்கள் எதிர்வரும் (04.12.2004) சனிக்கிழமை காலை 9 மணிக்கு எமது வங்கி அலுவலகத்தில் வைத்து பகிரங்க ஏலம்விடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

(சி-39435)(43-11-45) யாழ்.கிளை முகாமையாளர்.


# அரசாங்க அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்யப்படவுள்ள கீழே குறிப்பிடப் பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளுக்கான கட்டட வரைபடம் தயாரிப் பதற்கு அங்கீகரிக்கப்பட்ட கட்டட கலைஞர் அல்லது ஒன்றியம் அல் லது நிறுவனம் போன்றவற்றிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

1. யாழ்ப்பாணக் கச்சேரியின் பழைய பூங்காவை தாவரவியல் பூங்காவாக புனரமைத்தல்.
   வருங்கால அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு கட்டட வரைபடம் தயாரித்தல்.
2. நல்லூர் பிரதேச செயலகக் கட்டடம்
   நல்லூர் தமிழ்க் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் அமைத்தல்.
3. யாழ்ப்பாணக் கலாசார மண்டபம் அமைத்தல்.
   யாழ்ப்பாணப் பொது நூலக கட்டடத்திற்கு அமைவாக தமிழ்க் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டட வரைபடம் தயாரித்தல்.

விவரமான கட்டட வரைபடம், பொறியியல் சார்பான வரைபடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட செயலகப் புனர்வாழ்வுத் திட்டப்பணிப்பாளரைக் கந்தோர் நாள்களில் சந்தித்து மேலும் விவரங்களையும் கட்டடம் சம்பந்தமான விவரங்களையும் சம்பந்தப்பட்ட கட்டட கலைஞர் அல் லது ஒன்றியம் அல்லது நிறுவனம் பெற்றுக்கொள்ளலாம். ஆரம்ப அடிப் படை வரைபடத்துடன் தமது கேள்விகளை 2004 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

*செ.பத்மநாதன்,*
*அரசாங்க அதிபர்,*
*யாழ்.மாவட்டம்.*
01.12.2004. [சி-39433][29-11-43-45]

# மரண அறிவித்தல்கள்

## நந்நியர் தம்பிராசா



சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த நந்நியர் தம்பிராசா அவர்கள் 30.11.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவ ரும் வளர்மதி, சுரேஸ், சுமதி, காலஞ்சென்ற ஸ்ரீகுமார் மற்றும் கோமதி, சந்திரமதி, ஜெயக் குமார், இந்துமதி, கலைமதி, குலமதி ஆகியோ ரின் அன்புத் தகப்பனாரும் ஸ்ரீஸ்கந்தராசா, பரமலிங்கம், குணசீலன், மதனேஸ்வரன், ஜெசின், அன்பழகன், சுபாசினி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானம்மா, இராசம்மா, பொன்னையா, தங்கம்மா, செல்லையா, றோசம்மா, ஜெயராணி, சறோஜினிதேவி, புஸ்பதேவி, புஸ்பலதா ஆகி யோரின் அன்புச் சகோதரனும் அருளப்பு சுப்பிரமணியம், கந்தசாமி, நாகேஸ்வரி, மகாலிங்கம், ஆனந்தராசா, செல்வராசா, சோதிநாதன், மகேஸ்வரன், நடராஜா, சின்னத்தம்பி, பூமணி ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2.12.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகுல வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.* (39190)(43-11-45)

தகவல்:
மனைவி - தங்கரத்தினம்

## ஜெயபாலன் கஜேந்திரன்
### (சங்கரத்தை)

குளத்தடி, சங்கரத்தையைச் சேர்ந்த ஜெயபாலன் கஜேந்திரன் 01.12.2004 நேற்று அகால மரணமானார்.

அன்னார் ஜெயபாலன் - பவானி தம்பதிகளின் அருமைப் புதல்வனும் கஜனி, மதுரா, தரங்கன், கஜரூபன் ஆகியோரின் சகோதரரும் யோகேந்திரனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2004) வியாழக் கிழமை ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-39437)(43-11-45)

தகவல்:
ஜெயபாலன் (தந்தை)

# வர்த்தக நிறுவனத்தில் திருட்டு முயற்சி

குடாநாட்டில் அண்மைக்காலமாக திருட் டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக யாழ்.நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலை யங்கள் மீதும் இத்தகைய திருட்டு முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின் றது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு யாழ்.கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள டி.எச்.எல்.நிறுவனத்தில் இவ்வாறு திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது. இரண்டு மோட்டார் சைக்கள்களில் வந்த நான்கு பேர் கொண்ட குழு ஒன்று கறுப்பு உடை மற்றும் தலைக் கவசம் அணிந்தவாறு அன்றிரவு குறித்த நிறு வனத்தில் கடமையில் இருந்த காவலாளி யைத் தாக்கியதுடன் நிறுவனத்தின் கதவை திறக்கு மாறும் இல்லையேல் வெட்டி விடு வோம் என மிரட்டியதாகவும் கூறப்பட்டது.

இதனை அடுத்து நிறுவனத்தின் கதவினை உடைத்து உள்ளே நுழைந்த இந்தக்குழு அங்கு பெறுமதி மிக்க பொருள்கள் இல்லாததை அடுத்து மின்குமிழ்கள் உள்ளிட்ட சில பொருள்களை அடித்து நொறுக்கி நாசம் செய்து விட்டு சென்ற தாகக் கூறப்பட்டது.

(எ-6)


**THE ROYALCOLLEGE OF JAFFNA**
சனி, ஞாயிறு நாட்களில் O/L வரை விஞ் ஞானம் கற்பிப்பதற்கு ஆசிரியர் உடன் தேவை. தொடர்பு தலைமை ஆசிரியர். 426 (302) K.K.S. வீதி யாழ்ப்பாணம். (39183)

**புதிய கல்வியாண்டு 2005**
தரம் 01 முதல் O/L வரை
ஆரம்பம் : 06.12.2004
தரமான கற்பித்தல் அதன் விளைவுதான் உயர் பெறுபேறு. இது வெளிப்படை உண்மை.
**மது கல்வி நிறுவனம்**
**டச்சு வீதி, இருபாலை,**
(39189) **கோப்பாய்.**


**இலங்கை ஆசிரியர் சங்கம்**
(பதிவு இல. 984)
**யாழ்.மாவட்டம்**
**வடமாகாண ஆசிரியர் சங்கம்**
75 ஆவது வருடாந்தப்
பொதுக்கூட்டம - 2004

நாள்: 11-12-2004 சனிக்கிழமை.
நேரம்:- காலை 10.00 மணி.
இடம்:- யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
தலைமை:- தோழர் சா.தியாகலிங்கம் அவர்கள
தாய்ச் சங்க நிர்வாகிகள் கருத்துரை வழங்குவர்.

குறிப்பு:- பாதுகாப்பு வலயம் / வலய மல்லாத விடத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளின் விவரங்கள் நிரப்பட்ட படிவங்களை சனிக் கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் (04.12.2004, 05.12.2004) சங்க அலுவலகத்திலோ அல்லது வலயச் செயலாளரிடமோ காலை 8.30 - பி.ப.5 மணிக்கிடையில் ஒப்படைத்துவிடவும்.

காங்கேசன் சாலை,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

அ.பாலச்சந்திரன்.
செயலாளர்.

T.P.:021 222 2585, 021 - 459 1078
(சி-39436)


**ஓவ்செற் மெசின் விற்பனைக்கு**
எம்மிடம் நல்லநிலையிலுள்ள றொட்டா பிறின்ட் ஓவ்செற் மெசின் (14''x17'') பிளேற் மேக்கர், போய் லிங் மெசின் என்பன விற்பனைக் குண்டு.
தொடர்பு: T.P.: 077 6592002
(39181)

**ராஜா** யாழ்ப்பாணம்
இன்னும் சில தினங்கள் மட்டும் அஜித், (இருவேடம்) பூஜா நடித்த
**அட்டகாசம்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 மட்டும். (பு.நே)
(சி-38750)



**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது. (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
இன்று மட்டும் தனுஷ், ப்ரியா நடித்த காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)
**ட்ரீம்ஸ்** (ரீல்ஸ)
நாளை முதல் அஜித் சினேகா நடித்த **ஜனா**
தினசரி இரவு 9.00 (பு.நே.) **RAMBO-3**
(சி-39052)



**நிறஞ்சனாஸ்** சங்கானை
சூர்யா (இரு வேடம்) ஜோதிகா நடித்த **பேரழகன்**
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.) (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) **VAN HELSING** (நகுல படம்)
(சி-39051)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த டொல்பி ஒலி அமைப்புடன்



தினசரி 11.00 3.00 7.00. (பு.நே)


# மரண அறிவித்தல்கள்

### திருமதி
## வள்ளிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வள்ளிப் பிள்ளை சிதம்பரப்பிள்ளை அவர்கள் 30.11.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதவனம் சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு, வல்லிபுரம், கந்தையா, சின்னாச்சி, இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேச நாயகி (வவுனியா), சிவப்பிரகாசம் (இளைப்பாறிய அதிபர், தரணிக் குளம்), கலாநிதி சிவலிங்கராஜா (தமிழ்த்துறை, யாழ்பல்கலைக் கழகம்), நவமணிதேவி (வட்டக்கச்சி), வசந்தாதேவி (அரசினர் வைத்திய சாலை, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணி யம் (வவுனியா), நாகம்மா (தரணிக்குளம்), சரஸ்வதி (உடுவில் மகளிர் கல்லூரி), குமாரசாமி (வட்டக்கச்சி), மார்க்கண்டு (பொறியி யலாளர், திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாந்தினி சுந்தரமூர்த்தி, குமுதினி, நந்தகுமார் (கனடா), பகீரதி சுரேந்திரன் (ஜேர்மனி), மாதினி, சொரூபா சிவநேசபாலன், ரூபா முரளிதரன் (மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம்), சொரூபன், ஜசோதரா, ரூபன் (அல்அஸ்ஹர் தேசிய பாடசாலை, அக்குரோணை), சாம்பவி, சிவதி (24ஆம் அணி மருத்துவபீடம்), ரகுராமன், திருமகள் குகதாசன் (யா/இந்து மகளிர் கல்லூரி), மணிமேகலை (உள்ளூராட்சி உதவியாளர், கரச்சி பிரதேசசபை), சேரன் (தொழில்நுட்பக்கல்லூரி, கிளிநொச்சி), காலஞ்சென்ற பரதன், அகிலன் (கிளி.சாந்தபுரம் கலை மகள் வித்தியாலயம்), அருணா (பொறியில்பீடம், பேராதனை), சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தமிழரசி, குமணன், சனாதனி, அபிராம் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிள்ளையார் வீதி, திருநெல் வேலியில் உள்ள அவரின் மகனின் இல்லத்தில் இன்று (02.12.2004) வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஸ்ரீவித்தியா"*
*பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி.*
*T.P.:021 222 5909* (39186)(43-11-45)

தகவல்:
கலாநிதி எஸ்.சிவலிங்கராசா
(மகன்).

## சுவாம்பிள்ளை எஸ்தாக்கி



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை எஸ்தாக்கி (ராசா) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூமணியின் அன் புக் கணவரும் ஞானம், யசிந்தா, குமார் (இம் மனுவல்) சந்திரிகா (ஜேர்மனி), காலஞ்சென்ற மலர் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.12.2004) வியாழக்கிழமை பி.ப. 3மணிக்கு திருப்பலிக்காக புனித மரி யன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழையபூங்கா வீதி,*
*No.70/2, கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (39187)(43-11-45)

தகவல்:
மகன் - குமார்
(இம்மனுவேல்).

## சுப்பன் நாகன்

கைதடி தெற்கு, கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் நாகன் நேற்று (01.12.2004) புதன்கிழமை பி.ப. 4.30 மணிக்கு காலமானார்.

அன்னார் குஞ்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் தம்பியையா வின் பாசமிகு தந்தையும் தவமலரின் அன்பு மாமனாரும் விஜய குமார், சந்திரமோகன், சுதாகர், பிரபு, இளவரசி, பிரிந்தா, தாரணி (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் கணபதி, குஞ்சி, செல்லம்மா, மற்றும் காலஞ்சென்றவர்களான பண்டாரி, சின்னத்தம்பி, சீதேவி அகியோரின் அன்புச் சகோதரனும் கந்தன், செல்லம், கமலம், நாகம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான சிவலை, செல்லர், பண்டாரி, கணபதி, வைரவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2004) வியாழக் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரிந்தா தொலைத்தொடர்பகம்,*
*இளவரசி புடைவை அன் தையலகம்,*
*கைதடிதெற்கு, கைதடி.*
*T.P.:0602212652*

தகவல்:
தம்பிஐயா (மகன்).
(39188)(43-11-45)

## மார்க்கண்டு பாலசுந்தரம் (சுந்தரி)

கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலசுந்தரம் 30.11.2004 செவ்வாய்க்கிழமை காலமா னார்.

அன்னார் மார்க்கண்டு - மாணிக்கம் தம்பதிகளின் மகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் சுகிலா (சுந்தரி - லண் டன்), சுஜீபன், லஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபாகர னின் (லண்டன்) மாமனாரும் அபிராவின் பேரனும் சிவானந்தம், மகேஸ்வரி (லண்டன்), சிவநாதன், நிர்மலாதேவி (இந்தியா) ஆகி யோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2004) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளையாட்டரங்க வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (சி-39141)(43-11-45)

தகவல்:
திருமதி பா.சறோஜினிதேவி
(மனைவி), பிள்ளைகள்

## நிவாரணப்பொருள்களில் நிறைவெட்டு உள்ளதாம்!

யாழ்ப்பாணம்,டிசெ.2

குடாநாட்டில் உள்ள அநேகமான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்பட்டுவரும் நிவாரணப் பொருள்களில் நிறைவெட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என மக்கள் நலன்பேணும் அமைப்பு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேற்படி அமைப்பு பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

குடாநாட்டில் அநேகமாக கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் நிவாரணப் பொருள்களில் வெட்டு இடம்பெற்றுவருகின்றது.

குறிப்பாக, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலேயே இத்தகைய சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இத்தகைய செயற்பாடுகள் தவறானவை. எனவே, மக்கள் தாம் பெற்றுக்கொள்ளும் நிவாரணப் பொருள்களின் நிறையைக் குறித்த இடத்திலேயே சரிபார்த்துப் பெற்றுக்கொள்ள வேண்டும்-அதில் என்றுள்ளது. (எ-6)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தவுள்ளார்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இது என்று சாரப்பட விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தினத்தில் உரையாற்றிய பின்னர் அரசு தனது கருத்தை நேற்று வெளியிட்டது.

அரசின் கருத்தை விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிப்பதற்கும் அது குறித்து அவர்களின் கருத்தை அறிந்துகொள்வதற்குமாகவே பிரட்ஸ்கர் வன்னி செல்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படாத நிலையில் அரசியல் ரீதியிலான நெருக்கடி உச்சமடைந்திருக்கையில் நோர்வேத் தூதுவரின் விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது. (எ-க-6)

## இடைக்கால ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது மாவீரர்தின உரையில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

பொறுமையின் எல்லையில் நின்று தாம் இந்த வேண்டுகோளை விடுக்கிறார் என அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அந்த வேண்டுகோளை நிராகரிக்கும் விதத்தில் அரசு நேற்றுத் தனது பிரதிபலிப்பை வெளிப்படுத்தி, அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் கடந்த நவம்பர் 27ஆம் திகதி வெளியிட்ட அறிக்கை குறித்து இலங்கை அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்துள்ளது.

2003 ஏப்ரலிலிருந்து நேரடிப் பேச்சு இல்லாமல் இருப்பது யாருக்கும் பயன்தராதது; தாங்கமுடியாதது.

கடந்த ஏப்ரல் பொதுத் தேர்தலில் வென்று ஆட்சிக்குவந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு அதனால்தான், புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குத் தீவிர, நேர்மையான, விடாமுயற்சிகளில் ஈடுபட்டது. இந்த முயற்சிகள் பற்றி இலங்கை மக்களும், சர்வதேச சமூகமும் நன்கு அறிவர்.

ஒரு குறிப்பிட்ட விடயம் குறித்து மட்டுமே பேசவேண்டும் என்ற நிகழ்ச்சித் திட்டத்தை நிபந்தனையாகத் தான் குறிப்பிட்டுக்கொண்டு, நிபந்தனையற்ற அடிப்படையில் பேச்சை மீள ஆரம்பிக்குமாறு, மிரட்டல் மொழியில் புலிகள் இயக்கம் இப்போது அழைப்புவிடுப்பது நேர்மையான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு உகந்ததல்ல.

வடக்கு - கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமான மற்றும் அபிவிருத்தித் தேவைகளை நிறைவு செய்வதற்காக இடைக்கால அதிகார சபை ஒன்றை அமைப்பது குறித்துப் பேசத் தயாராக இருக்கும் அதேநேரம், 2002 டிசெம்பர் 5 இல் ஒஸ்லோவில் அரசும் புலிகளும் ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்ட ஆவணத்தின் அடிப்படையில் இறுதித்தீர்வு குறித்தும் பேச வேண்டும் என்பதைப் பகிரங்கமாகவும், நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாகவும் அரசு தெரியப்படுத்தியிருக்கின்றது - என்றுள்ளது. (எ-க)

## டிராக்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையில் படுகாயமடைந்த இவர், வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் உயிரிழந்தார். விபத்து இடம்பெற்றவேளை குறித்த இளைஞர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை எனக்கூறப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த மல்லாகம் மாவட்ட பதில் நீதிபதி இ.வசந்தசேனன் விசாரணைகளை மேற்கொண்டார்.

சம்பவத்தில் சேதமடைந்த உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன வட்டுக்கோட்டை பொலீஸாரால் மேலதிக விசாரணைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு யாழ்.வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-161-12-15-29)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைவிதிக்கும் விதிமுறைகளைச் சட்டமூலமாகவோ அல்லது நாடாளுமன்ற நிலையியல் கட்டளை ஏற்பாடுகள் மூலமாகவோ அறிமுகப்படுத்தி, அதை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையில் நாடாளுமன்றத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை வெளியேற வைப்பதே இக்கூட்டுச் சதியின் நோக்கமாகத் தென்படுகின்றது.

ஆளும் கூட்டணியைச் சேர்ந்த தீவிரப் போக்குடைய பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி, சமசமாஜக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன கூட்டாக இந்த முயற்சியில் ஈடுபட்டுவருகின்றன.

இம் முயற்சிக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு வழங்க விருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

அண்மைக் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியினரால் பெரிதும் சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டன.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் தனிமனித பேச்சுச் சுதந்திரம், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளின் 157/3 பிரிவு ஆகியவற்றின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்களை (சபாநாயகரால்) கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமாக அண்மையில் ஜாதிக ஹெலஉறுமயவின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வண. அத்துரெலிய ரத்தனசார தேரர் நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாகச் சர்ச்சை எழுப்பி வந்துள்ளார்.

எனினும், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளுக்கு அமைய, தமிழ் உறுப்பினர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கமுடியாது என சபாநாயகர் கை விரித்துவிட்டார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மாவீரர் தினத்தன்று நாடாளுமன்ற பிரதான நுழைவாயிலில் தீபம் ஏற்றி மாவீரர் தினத்தை அனுஷ்டித்தனர்.

இது இனவாத கட்சிகளுக்கு மேலும் எரிச்சலை ஊட்டியுள்ளது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட சர்ச்சை ஒன்றின்போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் கொரடாவான மஹிந்த சமரசிங்கவும் ஆளும் கட்சியினரின் ஆட்சேபனைக்கு ஒத்து ஊதியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை திருத்துவதால் நன்மை ஏற்படாது எனக் கருதி அரசமைப்பிலேயே ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் பேரினவாதக் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

அதேவேளை, தற்போது எதிர்க்கட்சியில் இருந்தாலும், பின்னர் நாங்களும் ஆளும் கட்சிக்கு வரும்போது இதே தமிழ்ப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கும் பெரும் தலையிடியாகவே இருப்பார்கள் என்ற அச்சம் ஐ.தே.க. மத்தியிலும் நிலவுவதாக கூறப்படுகின்றது.

இதன் எதிரொலியாகவே தென்பகுதி பெரும்பான்மை இன அரசியல் கட்சிகள் அனைத்தும் இணைந்து அரசமைப்பில் ஒரு திருத்தம் கொண்டுவர முயற்சிப்பதாகவும் தெரியவந்துள்ளது. (எ-க)

## குருநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருநகரைச் சேர்ந்த பொது அமைப்புகளின் பிரமுகர்கள் திருநகரைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் -

படையினர் தரப்பில் வடபகுதி சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் வர்ணகுரு யாழ்.நகர இராணுவத் தளபதி லோறன்ஸ் பெர்னாண்டோ, யாழ்.பிரிகேட் தளபதி உடவத்தை ஆகியோரும் - கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் இறுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ மோதல் சம்பவங்களின் சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவது.

★ இரு சமூகத்தின் மக்கள் பிரதிநிதிகளும் தமது பகுதி மக்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இதற்கிடையில் - நேற்றிரவு மீண்டும் அங்கு பதற்றநிலை உருவானது என்றும் -

இதனையடுத்து நேற்றிரவு 7 மணி முதல் இன்று காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது என்றும் -

செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்தினரும் பொலீஸாரும் நேற்றிரவும் குருநகர் மற்றும் திருநகர் பகுதிகளில் தீவிரரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும் - கூறப்பட்டது. (எ-51-12-190-17-7-6)

## 4 கோரிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களான வண. அத்துரெலிய ரத்னசார தேரர், வண. கொட்டபொல அமரகித்தி தேரர், வண. ஓமல்பே சோபிததேரர் ஆகியோர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

வண. அத்துரெலிய ரத்தனசார தேரர் அங்கு மேலும் கூறியதாவது:-

டிசெம்பர் 12 ஆம் திகதி வண. கங்கொடாவில சோம தேரரின் நினைவுதினமாகும். அன்றையதினம் நாடாளவிய ரீதியில் அவரை நினைவுகூர்வதற்கான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் அன்றைய தினம் நடிகர் ஷாருக்கான் இலங்கை வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடவடிக்கைக்கு அரசு முழுமையான அனுசரணை வழங்குகிறது. இதனை நாம் முழுமையாக எதிர்க்கிறோம்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் இப்போது மதுபானங்கள் விற்கப்படுகின்றன. அது உடனடியாகத் தடைசெய்யப்பட வேண்டும் .

மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என நாம் எத்தனையோ தடவைகள் வலியுறுத்தினோம். ஆனால், அரசு மௌனம் சாதித்துவருகிறது. இந்தச் சட்டம் விரைவில் கொண்டுவரப்படவேண்டும்.

அதேசமயம் வண. கங்கொடவில சோம தேரரின் மரணம் குறித்து விசாரணை செய்வதற்கு விசாரணை ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும்.

எனவே, இந்த நான்கு விடயங்கள் தொடர்பிலும் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் அரசு உரிய பதிலைத் தரவேண்டும். 12 ஆம் திகதி மாலை 6 மணிவரை நாம் கால அவகாசம் தருவோம். அரசு உரிய பிரதிபலிப்பை காண்பிக்கத் தவறினால் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் நாங்கள் அனைவரும் ஈடுபடுவோம் - என்றார் அவர். (எ-க)

## வவுனியா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்பன இதற்கான அழைப்பை கூட்டாக விடுத்துள்ளன.

மாவீரர்தின நிகழ்வுகளின்போது வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைக் கண்டித்தும் குறிப்பாக யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, வவுனியா, வேப்பங்குளம், மன்னார், திருகோணமலைப் பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாகத் தமது கண்டனத்தை வெளிப்படுத்தியும்- இந்த ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அசம்பாவிதங்கள் ஏற்பட்டுவிடும் என்ற மக்களின் அச்சவுணர்வை நீக்கவும் என பலத்த பாதுகாப்பு நடவடிக்கை களில் இராணுவத்தினரும், பொலீஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று உப்புவெளி பொலீஸார் தெரிவித்தனர்.

மேற்கண்ட சம்பவம் இடம்பெற்றதாகத் தமக்கு எந்தவித உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் -

ஆனாலும், அவ்வாறானதொரு வதந்தி நிலவியதாகவும், அதனால் பொதுமக்கள் பதற்றமடைந்துள்ளனர் என்றும் - திருகோணமலை படை வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, மஹிந்தபுரப் பகுதியில் வாழும் தமிழ்மக்கள் சிங்கள மக்களால் தாக்கப்படக்கூடும் என்ற வதந்தியும், அச்சமும் பரவியதால் நேற்றுப்பகலே ஒருவித பீதிநிலை காணப்பட்டது.

மஹிந்தபுர அருகில் உள்ள பகுதியில் இருக்கும் மதத் தலம் ஒன்றில் ஆயுங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

இரவு வேளையில் தமிழர்களை இலக்கு வைத்துத் தாக்குவதற்காகவே இந்த ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன என்றும் -

திருகோணமலையில் நேற்று நண்பகலுக்குப் பின்னர் ஒரு தகவல் பரபரப்பாகவும் பரவியது. இது விடயமாக பொலீஸாருக்கும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே நேற்று நள்ளிரவு வேளையில் எதிர்பார்க்கப்பட்ட நகரை விடுத்து வேறொரு பகுதியான லிங்கநகரில் வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன என்ற வதந்தி வெளியானது. இதனால் அப்பகுதி மக்கள் வெளியேவர அச்சப்பட்டு தமது வீடுகளிலேயே முடங்கிக் கிடந்தனர் எனக் கூறப்பட்டது.

கடந்த திங்களன்று திருகோணமலையில் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது நடந்த கிரனேட் வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. இந்நிகழ்வு முடிவுற்ற பின்னரே, லிங்கநகரில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட இத்தீய சக்திகள் இணைந்துள்ளன என உத்தியோகப் பற்றற்ற செய்திகள் தெரிவித்தன.

இந்தப்பதற்ற நிலையையடுத்து லிங்கபுரத்தில் இராணுவத்தினரும், பொலீஸாரும் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். நகரின் எல்லைப்பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் லூதர் தேவாலயப் பகுதியிலும் பொலீஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த வன்முறைச்சம்பவங்களால் பாதிக்கப்பட்ட எவரும் லிங்கபுரத்தில் இருந்தோ, வேறு பகுதிகளில் இருந்தோ நேற்று நள்ளிரவு வரை வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க-6)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி வேதாரணியம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூர், கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி வேதாரணியம் அவர்கள் 28.11.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சிவலிங்கம் வேதாரணியம் (யோகாஸ் பெரியண்ணை) அவர்களின் அன்பு மனைவியும் சிவதக்சினி (London), சுவேந்திரணி (Canada), சிவாஜினி (யாழ்.பல்கலைக் கழகம் நிதிக்கிளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாஸ்கரன் (London), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமிற்ற, அனிற்றா (London), கஜனி (Canada) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் -சரஸ்வதி தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சிவலிங்கம் - பொன்மணி தம்பதியினரின் அன்பு மருமகளும் திருமதி புஸ்பவதி வாமதேவன் (உரும்பிராய்), காலஞ்சென்ற திருமதி திலகவதி நாகராசா மற்றும் திருமதி குகனேஸ்வரி சிறீஸ்கந்தராசா (Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரலிங்கம் (லிங்கம் Bakehouse), சண்முகலிங்கம் (ஆஸ்திரேலியா), திருமதி ஞாகேஸ்வரி சரவணபவன் (Canada), திருமதி யோகேஸ்வரி சிவபாதநாதன் (Canada) ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"யோகாஸ்"
333, நாவலர் வீதி,
கைலாசபிள்ளையார் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 222 7483

தகவல்:
சி.வேதாரணியம் (கணவர்),
(பெரியண்ணை).

(C-39415)(38-11-45-29)

D.C.A
வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்,
ஸ்ரான்லி றோட்,
மக்கள் வங்கி அருகில்
யாழ்ப்பாணம்.
B.A. Part - I, Final
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
04-12.2004
சனி 9.00 a.m.
இ.நா.- சிவமகாலிங்கம்
தமிழ்- மகாலிங்கசிவம்
புவியியல் - கிரிதரன்
மெய்யியல் - மோகன்
அரசறிவியல் - பொன்சந்குரு
நாடகம் - சந்திரன்
D.C.A யில் மட்டுமே இவர்களது விரிவுரைகள் நடைபெறும்.

G.A.Q. 2006
பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)
◇ மேற்குறிப்பிட்ட பட்டப்பாட நெறிக்கான விண்ணப்பங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
◇ இதற்குரிய பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக செய்து தரப்படும்.
◇ இதற்குரிய விண்ணப்பப் படிவங்கள், விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
◇ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
விவரங்களுக்கு:
S.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
குறிப்பு:- யாழ்.பல்கலைக்கழகத்திற்குரிய G.A.Q. விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளன.
(39167)

விவேகானந்த கல்வி நிலையம் சுன்னாகம்
புதிய வகுப்புகள் ஆரம்பம்
தரம் 6 முதல் O/L வரை
ஆரம்பம் 4.12.2004
(சனிக்கிழமை)
(39161)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.